பக்கங்கள் – 16+8
விலை – ரூபா 60

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 131

ஞாயிற்றுக்கிழமை
06 ஏப்ரல் 2025

பங்குனி 23 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

## மலையக மக்களுக்கு 10 ஆயிரம் வீடுகள்!

கொழும்பு, ஏப். 6
இந்தியாவைப் பூர்வீகமாகக் கொண்ட தமிழ் மக்களுக்காக 10 ஆயிரம் வீடுகள் மற்றும் 14



# தமிழ் மக்களின் அபிலாஷையை நிறைவேற்றவேண்டும் இலங்கை

### பிரதமர் மோடி வலியுறுத்து

**கொழும்பு, ஏப்ரல் 6**

**இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவு செய்யவேண்டும். அத்துடன், அரசியலமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்தவும், மாகாணசபைத் தேர்தலை நடத்தவும் துரிதமாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பிரதமர் மோடி நேற்று வலியுறுத்தியுள்ளார்.** 14

## இந்திய மீனவர்களை உடன் விடுவியுங்கள்

### பிரதமர் மோடி கோரிக்கை

கொழும்பு, ஏப். 6
நல்லிணக்க அடிப்படையில், இலங்கைச் சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களை அவர்களின் படகுகளுடன் விடுவித்து அனுப்ப வேண்டும் என்று இந்தியப் பிரதமர் மோடி கோரிக்கையை முன்வைத்துள்ளார்.
ஜனாதிபதி அநுரகுமாரவுடன் நேற்று இடம்பெற்ற 14

## மாகாணசபைத் தேர்தல் நிச்சயம் மோடியிடம் அநுர உறுதி!

யாழ்ப்பாணம், ஏப். 6
மாகாணசபைத் தேர்தல் நிச்சயம் இடம்பெறும் என்று அரசு தன்னிடம் உறுதியளித்ததாக பிரதமர் மோடி கூறியுள்ளார்.
மோடிக்கும் தமிழ்ப் பிரதிநிதிகளுக்கும் 14

## மோடியின் வரவேற்பில் மொழிப் புறக்கணிப்பு!

கொழும்பு, ஏப். 6
இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை வரவேற்கும் வகையில் கொழும்பில் அரச தரப்பில் வைக்கப்பட்டுள்ள பதாகைகளில் தமிழ்மொழி புறக்கணிக்கப்பட்டுள்ளதாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.
பிரதமர் மோடியை வரவேற்கும் வகையில் காலிமுகத்திடல் உட்பட பல பகுதி 14

## இலங்கையில் சமஷ்டி ஏற்பட இந்தியாவின் அழுத்தம் தேவை

### பிரதமர் மோடியிடம் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஏப். 6
இலங்கை இந்திய ஒப்பந்தத்தை சமஷ்டி ஆட்சியினூடாக நடைமுறைப்படுத்த இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று இந்தியப் பிரதமர் மோடியிடம் தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் நேற்று நேரில் வலியுறுத்தியுள்ளனர். 14

## இந்தியாவுக்கு ஆபத்துநேர இலங்கை அனுமதிக்காது!

### ஜனாதிபதி அநுர தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 6
இந்தியாவின் பாதுகாப்புக்கும், இறைமைக்கும் தீங்கு விளைவிக்கும் வகையில், இலங்கையைப் பயன்படுத்த எவரையும் அனுமதிக்கப் போவதில்லை என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். 14



## இந்தியா - இலங்கையிடையே 3 அபிவிருத்தித் திட்டங்கள்

கொழும்பு, ஏப். 6
ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவும், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும் இணைந்து மூன்று அபிவிருத்தித் திட்டங்களை 14

**டில்லி கலை இலக்கியப் பேரவையின் தமிழ் கலை இலக்கிய மாநாடு யாழில்**

» விரிவு பக்:- 09 «

## இந்தியாவுடனான ஒப்பந்தம்; எந்தப் பாதிப்பும் ஏற்படாது!

### பாதுகாப்புச் செயலாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 6
இலங்கை-இந்தியாவுக்கு இடையிலான புதிய பாதுகாப்புப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தால் இலங்கைக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது என்று பாதுகாப்புச் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துயகொந்த தெரிவித்தார்.
இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான 14



‘எல்லாரும் நெருக்க அழுத்தம் குடுத்தா சமஷ்டி சப்பளிஞ்சு போகாதோ?’

### யாழ். பல்கலையில் பகிடிவதை

## மாணவனைத் தாக்கிய இருவர் விளக்கமறியலில்

யாழ்ப்பாணம், ஏப். 6
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞானபீடப் புதுமுக மாணவர் ஒருவரை பகிடிவதைக்கு உட்படுத்தித் தாக்கிய குற்றச்சாட்டில், 14

# சஞ்சீவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 05.04.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4039 |
| ஆங்கில எழுத்து | E |
| வெற்றி இலக்கங்கள் | 09 59 61 72 |
| விசேட எழுத்து | E |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 05.04.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1106 |
| வெற்றி இலக்கினம் | கும்பம் |
| வெற்றி இலக்கங்கள் | 09 23 29 60 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 05.04.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0065 |
| ஆங்கில எழுத்து | U |
| வெற்றி இலக்கங்கள் | 5 5 0 6 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 05.04.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2145 |
| ஆங்கில எழுத்து | D |
| சுப்பர் இலக்கம் | 10 |
| வெற்றி இலக்கங்கள் | 10 34 51 57 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 05.04.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5797 |
| ஆங்கில எழுத்து | Y |
| வெற்றி இலக்கங்கள் | 0 4 7 8 1 6 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 05.04.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1827 |
| ஆங்கில எழுத்து | J |
| வெற்றி இலக்கங்கள் | 02 10 47 82 |
| விசேட எழுத்து | J |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 05.04.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0372 |
| ஆங்கில எழுத்து | Y |
| வெற்றி இலக்கங்கள் | 7 8 1 6 |

# ராஜபக்சக்கள் ஆட்சிக்கும் இந்த அரசுக்கும் வித்தியாசமேது?

## சாணக்கியன் சாட்டை

**யாழ்ப்பாணம், ஏப்.6**

**காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்ட உள்ளகப் பொறிமுறையையே இந்த அரசாங்கமும் மீண்டும் கையிலெடுத்துள்ளது. குற்றஞ்செய்த இராணுவத்தினரை அநுர அரசாங்கமும் பாதுகாக்கின்றது என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் தெரிவித்துள்ளார்.**

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்.மாவட்ட உள்ளூராட்சிமன்றங்களுக்கான வேட்பாளர் அறிமுக நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றபோது அதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படுமா என்ற சந்தேகம் உள்ளது. உள்ளூராட்சிசபைத் தேர்தலின் பிற்பாடு மாகாணசபைத் தேர்தலை நடத்துவதாக அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்திருந்தார். ஆனால் அதற்குரிய சட்ட திருத்தத்தைச் செய்வதற்கான ஏற்பாடுகள் இதுவரை இடம்பெறுவதாகத் தெரியவில்லை.

இந்த வருடம் மாகாணசபைத் தேர்தலை நடத்தமுடியாது என அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ அண்மையில் தெரிவித்திருக்கிறார். மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கான வாய்ப்பை இல்லாமல் செய்கின்றார்களா என்ற சந்தேகம் எழுகிறது.

பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவார்கள் என்ற நம்பிக்கையில் வடமாகாண மக்கள் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்திருக்கலாம். ஆனால் அவர்கள் அரிசித் தட்டுப்பாட்டுக்கு நாயும், பூனையும் காரணம் என்றும், தேங்காய் தட்டுப்பாட்டுக்கு சம்பலும் சொதியும் சாப்பிடுவதே காரணம் எனவும் கூறும் அளவுக்குத்தான் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பொருளாதாரம் சம்பந்தமான அறிவு இருக்கின்றது.

கோத்தாபய, மஹிந்த ஆகியோர் நாங்கள் சிங்கள மக்களின் ஜனாதிபதி என வெளிப்படையாக கூறினார்கள். ஆனால் இவர்கள் வெளிப்படையாகக் கூறவில்லை ஆனால் அவர்களின் செயற்பாட்டை ஒத்த செயற்பாட்டையே இந்த அரசாங்கமும் மேற்கொள்கிறது. தேசிய மக்கள் சக்திக்கு இம்முறையும் தமிழ் மக்கள் வாக்களித்தால் ஏமாற்றமே மிஞ்சும்- என்றார். (ச-26)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 05.04.2025 | சனிக்கிழமை | 0505 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| J | 9 7 4 0 8 1 | |

| Super Ball | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 05.04.2025 | சனிக்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
| 2771 | C | 02 12 72 79 |

| சனிதா | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 05.04.2025 | சனிக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| E | 25 27 61 69 | 4932 |

| லக்ன ராசி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 05.04.2025 | சனிக்கிழமை | |
| துலாம் | | |
| | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| | 26 27 30 33 | 4483 |

| KAPRUKA | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 05.04.2025 | சனிக்கிழமை | | |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| T | 40 | 01 31 47 66 | 1947 |

| அத கோடிபதி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 05.04.2025 | சனிக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| U | 01 02 17 73 | 2597 |

| SASIRI | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 05.04.2025 | சனிக்கிழமை | |
| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் | |
| 0658 | 19 33 44 | |

# வரிவிதிப்பு அபாயம் ட்ரம்புடன் பேசுங்கள்

## சஜித் வலியுறுத்து

கொழும்பு, ஏப். 6

அமெரிக்காவின் வரிவிதிப்பால் ஏற்படும் ஆபத்திலிருந்து மீள்வதற்காக விசேட நிபுணர்கள் அடங்கிய குழுவொன்றை வொஷிங்டனுக்கு அனுப்பி ட்ரம்ப் நிர்வாகத்துடன் பேச்சு நடத்துமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், உலகின் அனைத்து நாடுகளுக்குமான புதிய இறக்குமதி வரியை அமெரிக்கா அறிவித்துள்ளது. இலங்கையில் இருந்து அமெரிக்காவுக்கு ஏற்றுமதிசெய்யப்படும் பொருள்களுக்கு 44 சதவீத வரி விதிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கம் இவற்றைக் கவனத்திற் கொள்ளாது செயற்பட்டுவருகின்றது. அரசாங்கம் வழமையான பொய்களைக் கூறி மக்களை மீண்டும் மீண்டும் ஏமாற்றிவருகிறது. நாட்டின் ஏற்றுமதியைப் பாதுகாக்க விசேட திட்டமொன்று தேவையாகும். வர்த்தகம் தொடர்பிலான விசேட பிரதிநிதி மற்றும் சர்வதேச வர்த்தகம் தொடர்பிலான விசேட நிபுணர்கள் குழுவை நியமித்து அவர்களை உடனடியாக வொஷிங்டனுக்கு அனுப்புங்கள். அமெரிக்க ஜனாதிபதியோடு கலந்துரையாடுங்கள்- என்றார். (ச-33-44)

# ஜே.வி.பி.யின் கிளர்ச்சி நாளில் இந்தியாவுடனான ஒப்பந்தம்

## முன்னிலை சோசலிசக் கட்சி தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.6

ஜே.வி.பி.யின் முதலாவது கிளர்ச்சி இடம்பெற்ற ஏப்ரல் ஐந்தாம் திகதியன்றுதான் ஜே.வி.பி. இந்தியாவுடன் ஒப்பந்தங்களைக் கைச்சாத்திட்டுள்ளது என்று என முன்னிலை சோசலிசக் கட்சியின் உறுப்பினர் குமார் குணரட்ணம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் மேலும் குமார் குணரட்ணம் தெரிவிக்கையில், இந்தியாவுடன் பாதுகாப்பு உடன்படிக்கை எரிசக்தித்துறை சம்பந்தமான உடன்படிக்கை உட்பட பல உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்படவுள்ளனவெனத் தகவல்கள் வெளியாகியுள் என.உலகின் எந்த நாடும் வேறு ஒரு நாட்டுடன் பாதுகாப்பு உடன்படிக்கையில் கைச்சாத்திடவில்லை. இலங்கை கைச்சாத்திட்டுள்ள உடன்படிக்கையின் பின்னால் அரசியலே உள்ளது. 1971 ஏப்ரல் ஐந்தாம் திகதி ஜே.வி.பி.யின் கிளர்ச்சி இடம்பெற்ற தினத்தில் இந்த ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படுவது விதியின் திருப்பம் - என்றார். (ச-இ)



# 'ஸ்ரீலங்கா மித்ர விபூஷண' விருது மோடிக்கு வழங்கிக் கௌரவிப்பு

கொழும்பு, ஏப்.6

இலங்கையுடன் கொண்டிருக்கும் நட்புறவுக்காக இந்தியப் பிரதமர் நரேந்திரமோடிக்கு 'ஸ்ரீலங்கா மித்ர விபூஷண' விருதை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வழங்கிக் கௌரவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. அங்கு உரையாற்றிய இந்தியப் பிரதமர் மோடி, 'செயற்கரிய யாவுள நட்பின் அதுபோல் வினைக்கரிய யாவுள காப்பு' என்ற திருக்குறளைக் கூறி நன்றி தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவால் 'இலங்கை மித்ர விபூஷண' விருது எனக்கு வழங்கப்பட்டது பெருமைக்குரிய விடயமாகும். இந்தப் பெருமை எனக்கு மட்டுமல்ல, 140 கோடி இந்தியர்களுக்கும் கிடைத்த பெருமையாகும் - என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசியமட்டத்தில் வாகைசூடிய வடக்கு மாற்றுத்திறனாளிகள்

## 16 பதக்கங்களைக் குவித்து கிளிநொச்சி முதலிடம்

### முல்லைத்தீவு மூன்றாமிடம்
### யாழ்.மாவட்டத்துக்கு 2 தங்கம்

யாழ்ப்பாணம், ஏப்.6

மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய மட்ட விளையாட்டுப்போட்டியில் 6 தங்கப்பதக்கங்களையும் 10 வெள்ளிப்பதக்கங்களையும் பெற்று கிளிநொச்சி மாவட்டம் தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்று சாதனையீட்டியுள்ளது.

அத்துடன் இந்தத் தேசியமட்டப் போட்டியில் முல்லைத்தீவு மாவட்டம் 5 முதலிடங்களையும் 4 இரண்டாமிடங்களையும் 5 மூன்றாமிடங்களையும் பெற்று தேசியரீதியில் மூன்றாவது மாவட்டமாக சாதனைபடைத்துள்ளது.

அதேவேளை யாழ்.மாவட்டம் இரண்டு தங்கப்பதக்கங்களையும் மூன்று வெற்றிச்சான்றிதழ்களையும் தனதாக்கியுள்ளது. அதற்கமைய பருத்தித்துறை சங்கானைப்பிரதேச செயலகத்துக்குட்பட்ட வீரர்களே தங்கப்பதக்கங்களை சுவீகரித்துள்ளனர்.

சமூக சேவைகள் திணைக்களத்தால் நடத்தப்பட்ட இந்தப் போட்டிகள் கடந்த வியாழக்கிழமை ஹோமகம மஹிந்த ராஜபக்ச விளையாட்டுமைதானத்தில் நடைபெற்றன.

இதில் 25 மாவட்டங்களிலிருந்தும் போட்டியாளர்கள் பங்குபற்றியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-27,66)



கிளிநொச்சி




யாழ்ப்பாணம்






முல்லைத்தீவு




# வேம்பொடுகேணி சி.சி.த.க.வில் விஞ்ஞானபாட ஆசிரியர் இல்லை

## மாணவர்கள் பாதிப்பு

யாழ்ப்பாணம் ஏப். 6

பளை வேம்பொடுகேணி சி.சி.த.க. பாடசாலையில் விஞ்ஞானபாட ஆசிரியர் இன்மையால் மாணவர்களின் கல்விநிலை பெரும் பாதிப்புக்குள்ளாகின்றது என்று பெற்றோர் கவலை தெரிவித்துள்ளனர்.

பாடசாலையில் கடமையாற்றிய விஞ்ஞானபாட ஆசிரியர் இடமாற்றம் பெற்றுச்சென்றுள்ளார். ஒன்றரை வருடகாலமாகியும் இதுவரை புதிய ஆசிரியர் நியமிக்கப்படவில்லை.

இதனால் கடந்த 2 ஆண்டுகளாக நடைபெற்ற க. பொ.த.சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் விஞ்ஞான பாடத்தில் உயர்கல்வி பெறும் தகைமையை இழந்துள்ளனர். அத்துடன் எதிர்காலத்தில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களும் விஞ்ஞான பாடத்துக்குத் தோற்றமுடியாத நிலையில் உள்ளனர்.

இந்தவிடயம் தொடர்பாக வலயக்கல்வி அலுவலகம் மற்றும் மாகாண கல்வித் திணைக்களம் ஆகியவற்றின் கவனத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டபோதிலும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே உரிய அதிகாரிகள் குறித்த பாடசாலைக்கு விஞ்ஞான பாடத்துக்கான ஆசிரியரை நியமிக்க உடன் நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-25, 9)



# ஐ.தே.கட்சியின் வேட்பாளர் கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 6

ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர்களுக்கும் யாழ்ப்பாண மாவட்ட உள்ளூராட்சிமன்ற வேட்பாளர்களுக்கும் இடையிலான சந்திப்பு கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன, பொதுச் செயலாளர் தலதா அத்துகோரள, மற்றும் உதவித் தலைவர் அகிலவிராஜ் காரியவசம் உட்பட வேட்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-41-20)



சாந்திக உளவள நிலையத்தினால் கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தின் மாணவர்களுக்கான உளநல மேம்பாடு, பாடசாலை இடைவிலகாமை, தொடர்ச்சியான கற்றல் என்பன தொடர்பான செயலமர்வு பாடசாலை மண்டபத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. (ச-41-17)

# குருதிக்கொடை

ஸ்ரீ சத்தியசாயி சுவாமிகளின் நூறாவது அவதார தினத்தை முன்னிட்டு வடபிராந்திய சத்தியசாயி சர்வதேச நிறுவனத்தின் ஏற்பாட்டில் குருதிக்கொடை முகாம் நிகழ்வு திருநெல்வேலியில் அமைந்துள்ள சத்தியசாயி சேவா நிலையத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் நண்பகல் 12 மணிவரை இடம்பெறவுள்ளது. (ச-25,66)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



அணித்தலைவர் சாம்சனின் வருகையுடன்

# வெற்றிப் பாதைக்கு திரும்பியது ராஜஸ்தான்

**ஐ.பி.எல். தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில், பஞ்சாப்பைத் தோற்கடித்து வெற்றிப் பாதைக்கு மீண்டும் திரும்பியது ராஜஸ்தான்.**

முதலில் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 205 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக ஜெய்ஸ்வால் 67 ஓட்டங்களையும், ரியான் பராக் 43 ஓட்டங்களையும், சாம்சன் 38 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பேர்குசன் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். பதிலுக்குக் களமிறங்கிய பஞ்சாப் அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 155 ஓட்டங்களை மட்டுமே பெற்று 50 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. நிஹால் வெதேரா அதிகபட்சமாக 62 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் ஆர்ச்சர் 3 விக்கெட்டுக்களையும், சன்டீப் சர்மா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள்.

ராஜஸ்தான் அணி கடந்த இரு ஆட்டங்களாகத் தொடர் தோல்விகளையும் பின்னடைவையும் சந்தித்து வந்தது. காயத்தால் அவதிப்பட்டுவந்த சாம்சன் நேற்று அணிக்குத் திரும்பியிருந்தார். அவருடைய வருகை ராஜஸ்தான் அணியை பலப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)



## வடக்கு மாகாண கராத்தேப் போட்டி

வடமாகாண கராத்தே சம்மேளனத்தின் ஏற்பாட்டில் வடமாகாண ரீதியிலான கராத்தேப் போட்டி நேற்று கிளிநொச்சியிலுள்ள வடமாகாண விளையாட்டுக் கட்டடத்தொகுதியின் உள்ளக அரங்கில் ஆரம்பமாகியுள்ள நிலையில் இன்றும் இடம்பெறவுள்ளது. திறந்தபோட்டியாக நடைபெறுகின்ற இந்தப் போட்டியில் ஐந்து மாவட்டங்களைச் சேர்ந்த ஆண்,பெண் போட்டியாளர்கள் கலந்து கொள்கின்றனர். ஆரம்பநிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை கராத்தே சம்மேளனத்தின் தலைவர் சிஹான்சிசிர குமார கலந்துகொண்டு போட்டியை ஆரம்பித்துவைத்தார். (ச-41-113)


## வீடுகள் வாடகைக்கு உண்டு

- நல்லூர் கோவிலில் இருந்து 400m தூரத்தில் 3 அறைகள், மாபிள், AC வசதியுடன் கூடிய வீடு. மாதவாடகை - 40000/-
- பலாலி வீதியோரமாக திருநெல்வேலி சந்தியில் இருந்து 350m தூரத்தில் 5 அறைகளுடன் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. மாதவாடகை - 100,000/-

077 306 8993, 070 711 3861

CS/57929) J-1


## கண்ணீர் அஞ்சலி



மண்ணில் 24.03.1941 விண்ணில் 05.04.2025

எமது பாடசாலை ஆசிரியர் திரு.க.குகனேசன் அவர்களின் அன்புத் தந்தை

**அம்பலவானர் கந்தசாமி**

அவர்கள் இறைவனடி சேர்ந்த செய்தி அறிந்து துயருறுகின்றோம். தந்தையின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**பாடசாலைச் சமூகம்**
**யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.**



## வேலை வாய்ப்பு

கட்டடநிர்மாண நிறுவனத்திற்கு (CIDA Grade C4) பின்வரும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ளவர்கள் தங்களது சுயவிபரக்கோவையை 07 நாட்களுக்குள் கீழ் உள்ள முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

* Project Engineer.
  - B.Sc.Eng (Civil)
  - Two years Experience in Building and Water Supply.
* Technical Officer (Civil)
  - (NCT-Civil/QS, HND - Civil/QS
  - Two years Experience in Building and Water Supply.
* Technical Officer (Electrical)
  - NCT / HND (Electrical)

E-mail: vacancynsc@gmail.com
WhatsApp : 0777120945


## மரண அறிவித்தல்



**கந்தையா இராசம்மா**

புத்தூர் கிழக்கு, முருகன் திடலை பிறப்பிடமாகவும், புத்தூர் கிழக்கு, தல்லுடையை புகுந்த இடமாகவும், புத்தூர் மேற்கு, புத்தூரை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா இராசம்மா நேற்று (05.04.2025) சனிக்கிழமை காலை 6.20 மணியளவில் இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - முத்தாச்சி தம்பதியரின் அன்பு மகளும், சின்னர் - பொன்னு தம்பதியரின் மருமகளும், சின்னர் கந்தையாவின் அன்பு மனைவியும், ப.பரமேஸ்வரி (அமரர்), இ.அப்புத்துரை (அமரர்), இ.கதிரவேலு (அமரர்), இ.நடேசன் (அமரர்), க.சின்னமணி (அமரர்), இ.சின்னத்துரை (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சி.செல்லர் (அமரர்), ஏ.மாணிக்கம் (அமரர்), க.ஆச்சிக்குட்டி (அமரர்), ற.அம்மா (அமரர்), சி.அப்புக்குட்டி (அமரர்), க.பரமநாதன் (அமரர்), அ.புவனேஸ்வரி (அமரர்), க.தங்கம்மா (அமரர்), ந.தணிகைநாயகி (அமரர்), க.கதிரவேலு சி.திருமலர் (கனடா) ஆகியோரின் மைத்துனியும், க.நாகராசா (குவைத்), சு.நகுலேஸ்வரி, க.நகுலேஸ்வரன் (அமரர்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், க.சுப்பிரமணியம் (தேவன் - கோயில் பூசகர்), நா.சந்திரலேகா ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜெசிந்தினி- கோகுலதாஸ், புலேந்திரன் - கயேந்தினி (பிரான்ஸ்), சவேந்திரன், குவேந்திரன், கம்ஷாயினி, தபோதினி, கீர்த்தனா, தனுஷாந் ஆகியோரின் பேர்த்தியும், நிருஷனா, ஆதித்தன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் புத்தூர் மேற்கு புத்தூரில் உள்ள இல்லத்தில் நாளை (07.04.2025) திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் கிரியைகள் நடைபெற்று பூதவுடல் கிந்திட்டி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். இவ் அறித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**க.சுப்பிரமணியம்**
**(தேவையா - பூசகர்) மருமகன்**
**077 110 8875, 076 86 41 384**

(CS 2878) A


## தேவை

யாழ்ப்பாணத்திலுள்ள அரைக்கும் ஆலைக்கு பொதியிடல் உதவியாளர், மா வறுத்தல் என்பவற்றிற்கு பயிலுனர், அனுபவம் உள்ள ஆண், பெண் ஊழியர்கள் தேவை.

076 056 8518

## தென்னங்காணி விற்பனைக்கு

கொடிகாமம் பருத்தித்துறை வீதியில்
14 பரப்புக்களாகப் பிரிக்கப்பட்ட 02 துண்டுகளும்
19 பரப்புக்களாகப் பிரிக்கப்பட்ட 02 துண்டுகளும்
அருகருகில் விற்பனைக்கு உண்டு.
கொடிகாமம் நகரத்திலிருந்து 2.5 கி.மீ. தூரத்தில்

தொடர்புகளுக்கு: 077 327 6500

## நாகபூஷணி திருமண சேவை

புதுவருடத்தை முன்னிட்டு
**50% கட்டணக் கழிவு**
**(06.04.2025 முதல் 16.04.2025 வரை)**

நீங்கள் விரும்பும் மணமக்களை மிகப் பொருத்தமாக உடன் தெரிவு செய்து தரப்பட்டு, துரிதமாகத் திருமணம் நிறைவேற்றி வைக்கப்படும்.

198, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
(வன்னி இன் ஹோட்டலுக்கு அருகில்)

077 138 7596, 071 9999 306, 021 222 9306

(CS 57877) A


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** வாழ்க்கைத்துணையிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். தாய்மாமன் வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். சிலருக்கு குடும்பம் தொடர்பான வெளியூர்ப் பயணம் மேற்கொள்ள நேரிடலாம்.

**இடபம்:** தாயிடம் எதிர்பார்த்த உதவி கிடைக் கும். சகோதர வகையில் சிறு சிறு சங்கடங்கள், அவர்களுக் காக வீண் செலவுகளும் ஏற்படக்கூடும். கணவன் மனைவிக்கிடையே வாக்குவாதம் ஏற்பட்டாலும் பெரிய அளவில் பாதிப்பு எதுவும் இருக்காது.

**மிதுனம்:** மனதில் தெய்வபக்தி அதிகரிக்கும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். மற்றவர்களுடன் பேசும்போது பொறு மையைக் கடைப்பிடிக்கவும். பிற்பகலுக்கு மேல் சிலருக்கு புதிய நண்பர் களின் அறிமுகமும், அதனால் ஆதாயமும் உண்டாகும்.

**கடகம்:** சிலருக்கு தெய்வப் பிரார்த்தனை களை நிறை வேற்றும் வாய்ப்பு ஏற்படக்கூடும். நீண்டநாளாக எதிர்பார்த்த நல்ல தகவல் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக செலவு செய்வீர்கள்.

**சிம்மம்:** உற்சாகமான நாளாக அமையும். எதிர்பார்க்கும் காரியங்கள் சாதகமாக முடியும். நண்பர்கள் வீட்டு விருந்து விசேஷங்களில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படும். முக்கியப் பிரமுகர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தருவதாக இருக்கும்.

**கன்னி:** பணப்புழக்கம் அதிகரிக்கும். அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாக முடியும். உறவினர்களிடம் இருந்து எதிர்பார்த்த நல்ல தகவல் இன்று கிடைக்க வாய்ப்பு உண்டு. சிலருக்கு தந்தை வழி உறவினர்களால் ஆதாயம் உண்டாகும்.

**துலாம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். சிலருக்குக் குடும்ப விஷயமாக வெளியூர்ப் பயணம் மேற்கொள்ள நேரிடும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். பிற்பகலுக்கு மேல் மற்ற வர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**விருச்சிகம்:** இன்றைக்கு புதிய முயற்சிகளில் ஈடுபடாமல் வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். பிற்பகலுக்கு மேல் உறவினர்கள் வருகையால் வீட்டில் பிரச்னை ஏற்படக்கூடும். வாழ்க்கைத்துணைவழி உறவுகள் உதவி கேட்டு வருவார்கள்.

**தனுசு:** தாய்மாமன் வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். அரசாங்கக் காரியங்கள் முடிவதில் சிறு தடை ஏற்படக்கூடும். மாலை யில் மனதுக்கு மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். இளைய சகோதர வகையில் அனுகூலம் உண்டாகும்.

**மகரம்:** சகோதரர்கள் உங்கள் ஆலோச னையை ஏற்றுக்கொள்வார் கள். சிலருக்கு எதிர்பாராத பண வரவுக்கும் வாய்ப்பு உண்டு. வெளியூரில் இருந்து வரும் செய்தி உங்கள் முன்னேற்றத்துக்கு உதவு வதாக இருக்கும்.

**கும்பம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். சகோதரர்கள் பணம் கேட்டு வருவார்கள். பிள்ளைகளுக்காக செலவு செய்யவேண்டி இருக்கும். மாலையில் நண்பர்களின் சந்திப்பு மனதுக்கு உற்சாகம் தரும்.

**மீனம்:** ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். தாயின் அன்பும் ஆதரவும் மனதுக்கு உற்சாகம் தரும். புதிய முயற்சிகளை யோசித்து எடுப்பது நல்லது. கடன்கள் விஷயத்தில் சற்று எச்சரிக்கை யாக இருக்கவும்.

# சொந்த மண்ணில் வீழ்ந்த சென்னை!

## மாற்றுத் திட்டங்கள் இல்லாமல் திணறல்

**சென்னை, ஏப். 6**

**ஐ.பி.எல். தொடரில் நேற்று மாலை நடைபெற்ற ஆட்டத்தில், சொந்த மண்ணில் சென்னை சுப்பர் கிங்ஸ் படு தோல்வியடைந்தது.**



டெல்லி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மா னித்தது. ஓட்டமெதையும் பெறாத நிலை யில் டெல்லியின் முதலாவது விக்கெட் வீழ்த்தப்பட்டாலும், கே.எல்.ராகுல் அதிகபட் சமாக 77 ஓட்டங்களையும், போரல் 33 ஓட்டங்களையும் பெற்று அணியைப் பலப் படுத்தினார்கள். அணித்தலைவர் அக்சர் பட்டேல் 14 பந்துகளில் 21 ஓட்டங்களையும், ஸ்ரப்ஸ் 12 பந்துகளில் 24 ஓட்டங்களை யும் மத்திய வரிசையில் பெற்றுக்கொடுக்க டெல்லி அணி 20 ஓவர்களின் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 183 ஓட்டங்க ளைப் பெற்றது.

பந்துவீச்சில் கலீல் அஹமட் 2 விக்கெட் களை வீழ்த்தினார்.

பதிலுக்குக் களமிறங்கிய சென்னை அணிக்கு முன்வரிசை வீரர்களான ரச்சின் ரவீந்திரா 3 ஓட் டங்களையும், கொன்வே 13 ஓட்டங்களையும், ஹெய்க்வாட் 5 ஓட்டங்களையும் பெற்று அடுத்தடுத்து வீழ்ந்தனர். விஜய் சங்கர் ஒருமுனையில் நிலைத்து நின் றாலும் மறுமுனையில் டுபே 18 ஓட்டங் களுடனும், ஜடேஜா 2 ஓட்டங்களுடனும் வீழ்ந்தனர். விஜய் சங்கர் 69 ஓட்டங்க ளையும், டோனி 30 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றனர். ஆனால், விஜய் சங்கர் 54 பந்துகளையும், டோனி 26 பந்துகளையும் எதிர்கொண் டனர். முடிவில் 5 விக்கெட்களை இழந்து 158 ஓட்டங்களை மட்டுமே சென்னை பெற்றது. 25 ஓட்டங்களால் டெல்லி வெற்றிபெற்றது. (ம-இ)

## டோனி ஓய்வு?

டோனி ஓய்வு பெறவுள்ளார் என்று தகவல்கள் வெளியா கியுள்ளன. 43 வயதாகும் டோனி, சென்னை மைதா னத்தில் வைத்து இம்முறை ஓய்வை அறிவிக்கவுள்ளார் என்று தகவல்கள் வெளியா கியுள்ளன. அவருடைய பெற்றோர் முதல்முறையாக நேற்று மைதானத்துக்கு வந்து அவரின் ஆட்டத்தைப் பார்த்தனர். (ம)






# ஈழத்து இலக்கிய ஆளுமைகள் தமிழக ஆளுநரால் கௌரவிப்பு!

சென்னை, ஏப். 6

ஈழத்தின் இலக்கிய ஆளுமைகள் இரு வர், தமிழ் இலக்கிய ஆளுமைக்காக தமிழக ஆளுநர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

வவுனியாத் தமிழ்ச்சங்க அமைப்பாள ரும், சிறந்த பேச்சாளருமான தமிழருவி த.சிவகுமாரன், யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கப் பொதுச்செயலாளரும், கோப் பாய் ஆசிரியர் கலாசாலையின் முதல் வருமான செந்தமிழ்ச்சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன் ஆகியோரே இந்த விருதுகள் வழங்கப்பட்டுள்ளன. இருவருக்குமான விருது நேற்றுச் சனிக்கிழமை முற்பகல் சென்னை ஆளுநர் மாளிகையான ராஜ்பவனில் வைத்து [illegible] தலைமையில் வழங்கப்பட்டது. (ம-ஒ)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

# இராஜதந்திரச் சதிராட்டம்!

இந்தியப் பிரதமர் மோடி, உலகின் பல நாடுகளைப் போல இலங்கையிலும் வெகுவாக வரவேற்கப்பட்டிருக்கின்றார். ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், இந்தியாவின் நட்புக் கரத்தில் இருந்து விலகி மெல்ல மெல்ல சீனாவை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது என்ற குற்றச்சாட்டுகள் அண்மைக்காலமாக தாராளமாகவே முன்வைக்கப்பட்டிருந்தது. இவ்வாறானதொரு பின்னணியில், பிரதமர் மோடியின் இலங்கைக்கான வருகையும், அவருக்கு வழங்கியுள்ள வரவேற்பும் பல்வேறுபட்ட செய்திகளைக் கட்டியம் செய்திருக்கின்றன.

இந்தியாவுக்குச் சார்பான நாடாக இலங்கை இல்லாவிடினும், ஆகக் குறைந்தது ஓர் அணிசேரா நாடாக இருக்கின்றது என்பதைக் காண்பிப்பதற்கும், நிரூபிப்பதற்கும் நேற்று அளப்பெரும் எத்தனங்களை அநுர அணியினர் மேற்கொண்டிருந்தனர். இன்னும் சொல்லப்போனால், தமது நடவடிக்கைகளில் அவர்கள் வெற்றியும் கண்டிருக்கின்றனர். உண்மையில், இலங்கையில் நீண்டகாலமாக நிலவும் இனப் பிரச்சினைகள் தொடர்பிலோ, இனப்பிரச்சினைக்கான தீர்வுகள் தொடர்பிலோ 'காத்திரமான கவனத்தைச் செலுத்துவதற்கு' பாரதம் மீண்டுமொருமுறை தவறியிருக்கின்றது.

புதிய அரசமைப்பு உருவாக்கம், 13ஆவது திருத்தம், அத்துமீறிய மீன்பிடி, மாகாணசபைத் தேர்தல், இந்து மதத்தலங்கள் மீதான ஆக்கிரமிப்பு இவை அனைத்தையும் ஒரே கோட்டில் வைத்து பிதமர் மோடி அணுகுவார். ஏதோவொரு அழுத்தத்தை அவர் கொழும்புக்குக் கொடுப்பார் என்ற எதிர்பார்ப்பு தமிழர்களின் மனங்களில் நிறைந்திருந்தது. தமிழர்களின் அபிலாசைகளையும், எதிர்பார்ப்புகளையும் தோள்களில் சுமந்தவாறு இலங்கையை அணுகுவார் என்றே மோடியின் வருகையைத் தமிழர்கள் எதிர்பரார்த்துக் காத்திருந்தனர். ஆனால், 'இலங்கை மித்ர விபூஷண விருதை' தோள்களில் சுமந்தவாறும், அந்த விருதுக்கான நன்றியைச் செலுத்தியவாறும் கொழும்பை மோடி எதிர்கொண்டிருப்பது உண்மையில் கவலைக்குரியது.

இலங்கைத் தமிழர்கள் விடயத்தில், பிரதமர் மோடி தோளோடு தோள் நிற்பார் என்று பா.ஜ.க.வின் தமிழகத் தலைவர் அண்ணாமலை, இந்திய வெளிவிவகார அமைச்சின் முக்கியஸ்தர் மிஸ்ரி, இந்தியாவின் பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் ஆகியோர் கூறிக்கொள்வதில் அர்த்தமில்லை. பிரதமர் மோடி எத்தகைய கருத்துக்களை பட்டவர்த்தனமாக வெளிப்படுத்துகின்றார் என்பதே இங்கு பிரதானம். பிரதமர் மோடி இத்துடன் நான்காவது தடவையாக இலங்கைக்கு வந்து சென்றிருக்கின்றார். ஆனால், தமிழர்களின் அத்தனை பிரச்சினைகளும் கிணற்றில் வீசிய கல்லாகக் கிடக்கின்றமையும், துயரத் தொடர்கதையின் அத்தியாயங்களாக மாறிக் கொண்டிருப்பதும் பெரும் அபத்தம்.

இலங்கையின் பெருமைக்குரிய மித்ர விபூஷண விருதை ஏற்றிருப்பதன் மூலம், இலங்கையின் தேசியக் கொள்கைகள், வெளிவிவகாரக் கொள்கைகள், ஆட்புல ஒருமைப்பாடு, இறைமை ஆகியவற்றையும் பிரதமர் மோடி ஏற்று விசுவாசித்திருக்கின்றார் என்றே அர்த்தப்படுகின்றது. முன்னாள் ஜனாதிபதி ரணிலின் அரசு, இந்தியாவைத் தொலைவாக வைத்து இராஜதந்திரங்களால் அணுகியது என்றால், அநுரவின் அரசாங்கம் அருகே அழைத்து, ஒரே போடாய் போட்டிருக்கின்றது. அவ்வளவே!

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

## நாளொரு நல்வார்த்தை

எவனொருவன் தனக்குத்தானே கட்டுப்பாடுகளை ஏற்படுத்திக்கொண்டு அவற்றைக் கடைப்பிடித்து வாழ்கிறானோ அவனே சுதந்திரமானவன்.

—மகாத்மா காந்தி—




அமெரிக்கா வரிவிதிப்பு

# ஜி.எஸ். பி. பிளஸ் சலுகை இலங்கைக்கு இரத்தாகலாம்



கொழும்பு, ஏப். 6

அமெரிக்காவின் புதியவரிக்கொள்கையின் அடிப்படையில் இலங்கை உள்ளிட்ட ஜி.எஸ்.பி. பிளஸ் நிவாரணம் கிடைக்கும் அனைத்து நாடுகளுக்கும் ஜி.எஸ்.பி பிளஸ் சலுகை இல்லாமற்போகும் நிலைமை காணப்படுவதாக நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த நெருக்கடி தேசிய ரீதியானது. இதனால் ஏற்படக்கூடிய விளைவுகள் மிகப்பெரியதாக இருக்கலாம். பாதுகாப்புவாதக் கொள்கைகளுக்குத் திரும்புவதற்குப் பதிலாக இலங்கைக் கட்டணச் சுவர்களை உடைத்து வர்த்தகப் பாலங்களைக் கட்டவேண்டும்.

நெருக்கடிகளிலிருந்து மீள்வதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு அரசாங்கத்துக்கு ஒத்துழைப்புகளை வழங்குவதற்குத் தயாராகவே இருக்கின்றோம் - என்றார். (ச-இ)

# கொழும்பில் இந்தியப் போர்க்கப்பல்கள்

கொழும்பு, ஏப். 6

இந்தியக் கடற்படைக் கப்பலொன்று உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு நேற்று கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளது. வருகைதந்த கப்பலை இலங்கைக் கடற்படையினர் கடற்படை மரபுகளுக்கு இணங்க வரவேற்றுள்ளனர்.

இந்தக் கப்பல் நாளை திங்கட்கிழமை கொழும்பிலிருந்து புறப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# மதச்சீர்குலைவு கண்காணிக்க பொறிமுறை

கொழும்பு, ஏப்.6

திரிபுபடுத்தப்பட்ட மதரீதியான பிரசாரங்களைக் கண்காணிப்பதற்கென பொறிமுறையொன்று உருவாக்கப்படும் எனப் புத்தசாசன பிரதியமைச்சர் கமகெதர திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

இதுவரை இலங்கையில் திரிபுபடுத்தப்பட்ட மதரீதியான பிரசாரங்களைக் கண்காணிப்பதற்கென பொறிமுறையொன்று உருவாக்கப்படவில்லை. வெளிநாடுகளிலிருந்து வரும் சிலரால் திரிபுபடுத்தப்பட்ட மதரீதியான பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. இதனால் அனைத்து மதங்களும் பாதிப்புக்குள்ளாகின்றன. எனவே இதனைக் கண்காணிப்பதற்கு அர்ப்பணிப்புள்ள ஒரு பிரிவு உருவாக்கப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ச-6)

## சர்வதேசத் தரம்வாய்ந்த கால்பந்தாட்ட மைதானம் விரைவில் இலங்கையில்

கொழும்பு, ஏப். 6

இலங்கையில் சர்வதேசத் தரம்வாய்ந்த கால்பந்தாட்ட மைதானம் ஒன்றை அமைத்துக்கொடுப்பதற்கு ஆசிய கால்பந்தாட்டக் கழகங்களின் சம்மேளனம் இணக்கம் தெரிவித்துள்ளது. ஆசிய கால்பந்தாட்டக் கழகங்களின் சம்மேளனத் தலைவர் ஷகித் சல்மான் பின் இப்ராஹிம் அல் காலிபா அண்மையில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு விளையாட்டுத்துறைப் பிரதியமைச்சர் சுகத்த திலகரத்னவைச் சந்தித்துக் கலந்துரையாடியபோதே இதனைத் தெரிவித்தார். (ச-41-6)



# மீளளிக்கப்படாத 42 துப்பாக்கிகள்

கொழும்பு, ஏப். 6

தனிப்பட்ட பாதுகாப்புக்கென துப்பாக்கிகளைப் பெற்ற 42 பேர் இதுவரை துப்பாக்கிகளைத் திருப்பி ஒப்படைக்கவில்லை என அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ கடந்த புதன்கிழமை நாடாளுமன்றில் உரையாற்றுகையில் தெரிவித்துள்ளார்.

இவர்கள் தற்போது நாட்டில் இருக்கிறார்களா? அல்லது வெளிநாடு சென்றுவிட்டார்களா? என்ற விசாரணைகள் இடம்பெற்றுவருவதோடு அவர்களுக்கு எதிரான சட்டநடவடிக்கைகள் விரைவில் பூர்த்தியாக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார். (ச-41-6)

நாளை
திங்கட்கிழமை -பங்குனி- 24
07.04.2025
சுபநேரம் : 12.08- 01.38
ராகுகாலம் : 07.38 - 09.08

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம், ஏப்.6

குப்பிழான் கேணியடி ஞானவைரவர் அலங்கார உற்சவம் கடந்த வியாழக்கிழமை ஆரம்பமாகியது.

தொடர்ந்தும் 10 தினங்கள் இடம்பெறவுள்ள உற்சவத்தில் எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப.10.30 மணிக்கு அபிஷேக வழிபாடுகளுடன் வைரவர் வீதி உலா இடம்பெற்று அன்னதானம் இடம்பெறும்.

மறுநாள் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.30 மணியளவில் வழிபாடுகள் ஆரம்பமாகி 108 சங்காபிஷேகம், வசந்தமண்டபப் பூஜை, அன்னதானம் என்பன இடம்பெறுமென ஆலயப் பரிபாலனசபையினர் தெரிவித்துள்ளனர். (ச-25,66)

# பட்டாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஏப். 6

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் அமைந்துள்ள ராமர் சந்நிதானத்தில் ஸ்ரீராம நவமி உற்சவம் கடந்த மாதம் சனிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து ஒன்பது தினங்கள் நடைபெற்று வருகின்றது. இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் 108 சங்காபிஷேகமும், அதனைத் தொடர்ந்து ஸ்ரீராம பட்டாபிஷேகமும் நடைபெற்று மணக்கோலத்தில் சீதா சகிதம் ஸ்ரீராமபிரான் உள்வீதி, வெளி வீதி உலாவரும் திருக்காட்சி இடம்பெறுமென ஆலயப் பரிபாலனசபையினர் தெரிவித்துள்ளனர். (ச-41-66)



# இரத்ததான முகாம்

கிளிநொச்சி, ஏப்.6

கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையின் குருதித்தேவையைப் பூர்த்திசெய்யும் முகமாக கிளிநொச்சி மகாவித்தியாலய 2015ஆம் ஆண்டு உயர்தரப் பழைய மாணவர்களின் எழுகை அமைப்பினால் இரத்ததானமுகாம் பசுமைப்பூங்கா வளாகத்தில் அண்மையில் நடத்தப்பட்டது. (ச-41-113)

# கழிவகற்றல் வாகனங்களிலிருந்து வீதியில் விசிறப்படும் குப்பைகள்!

## யாழ். மாநகரசபை அசண்டையீனம்

**யாழ்ப்பாணம், ஏப்.6**

**மானிப்பாய் பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட கல்லூண்டாய் பகுதியிலுள்ள கழிவுகள் சேகரிக்கும் இடத்துக்கு கழிவுப்பொருள்களைக் கொண்டுசெல்லும் யாழ். மாநகரசபையின் வாகனங்கள் உரியமுறைகளைப் பின்பற்றாது கழிவுகளை வீதியில் கொட்டிச் சிந்தியவாறு செல்கின்றன. இதனால் மக்கள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.**



காக்கைதீவுச் சந்தையில் இருந்து வட்டுக்கோட்டை செல்லும் நடுவீதியிலேயே ஏராளமான கழிவுகள் கொட்டப்பட்டுக் காணப்படுகின்றன. காரைநகர் மற்றும் சித்தங்கேணி நோக்கிப் பயணிக்கும் பிரதான வீதியாக இந்த வீதி காணப்படுகிறது.

இவ்வாறு வீதியில் கழிவுகள் கொட்டப்படுவதால் அவை காற்றுடன் பறந்து சுகாதாரச்சீர்கேட்டை ஏற்படுத்துகின்றன. உள்ளூராட்சிசபைகள் கிராமங்களையும், நகரங்களையும் அபிவிருத்தி செய்வதையும், தூய்மையைப் பேணுவதையுமே பிரதான நோக்கமாகக்கொண்டு காணப்படும் நிலையில் யாழ். மாநகரசபை இவ்வாறு அசண்டையீனமாகச் செயற்படுவது ஏற்புடையதல்ல என்றும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். இது குறித்து மானிப்பாய் பிரதேசசபையின் செயலாளரைத் தொடர்புகொண்டு வினவியபோது, குறித்த வீதியில் யாழ். மாநகரசபையினர் கழிவுகளை எடுத்துச்செல்லும்போது கழிவுகளைக் கொட்டிச்சிந்தியவாறே கொண்டுசெல்கின்றனர். இது குறித்துத் தெரியப்படுத்தியும் அவர்கள் அதனை சீர்செய்வதாகத் தெரியவில்லை - என்றார். (ச-27)

# நிர்வாகத் தெரிவு

யாழ்ப்பாணம், ஏப். 6

பகிரங்க சேவைகள் ஓய்வூதிய நம்பிக்கை நிதியத்தின் 22ஆவது பொதுக்கூட்டம் வலிகாமம் தெற்கு பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. இதன்போது புதிய நிர்வாகத்தெரிவு இடம்பெற்றது.

இதில் தலைவராக ப. மகேந்திரதாசன், செயலாளராக ந. சுப்பிரமணியம், பொருளாளராக நா. மோகனதாஸ், உப தலைவராக ந. சண்முகவேல், உப செயலாளராக இ. குலசிங்கம், நிர்வாகசபை உறுப்பினர்களாக மா. சீவரத்னம், செ. இராசலிங்கம், கணக்குப் பரிசோதகராக சி. கந்தசாமி ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். (ச-41)

# யோகர் சுவாமி குருபூஜை

கொழும்புத்துறை, ஏப். 6

சிவயோக சுவாமிகளின் குருபூஜை தினம் கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலத்தில் நாளை திங்கட்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

சிறப்புப் பூஜை , சொற்பொழிவுகள் இடம்பெற்று சுவாமிகளின் உருவச்சிலைக்கு மாலை அணிவிக்கப்படும். நண்பகல் மாணவர்களுக்கு அன்னதானம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25,17)

****

யாழ்ப்பாணம், ஏப். 6

தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்கா தேவி ஆலய நிர்வாகசபை நடத்தும் தவத்திரு யோகர் சுவாமிகளின் குருபூசை நிகழ்வு நல்லூரில் அமைந்துள்ள ஸ்ரீதுர்க்கா மணிமண்டபத்தில் நாளை திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது. திருமுறைப் பாராயணம், யோகர் சுவாமிகளின் நற்சிந்தனைப் பாடல்கள் ஓதுதலைத் தொடர்ந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துக் கற்கைகள்பீட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி இ.ஜெயந்திரன் சிறப்புரை ஆற்றவுள்ளார். (ச-41-66)

****

யாழ்ப்பாணம், ஏப். 6

கொழும்புத்துறை யோகர் சுவாமிகள் சமாதி ஆலயத்தில் யோகர்சுவாமிகளின் 61 ஆவது குருபூசை தினத்தையொட்டி நாளை திங்கட்கிழமை காலை 8 மணிக்கு சிறப்புப் பூசை அபிஷேகம், நற்சிந்தனை வழிபாடுகள் என்பன இடம்பெறவுள்ளன. (ச-17)



# தேர்தல் ஒழுங்குகள் கலந்துரையாடல்!

உள்ளூராட்சி அதிகாரசபைத் தேர்தலில் அஞ்சல்மூல வாக்குகளை விநியோகிக்கும் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுடனான கலந்துரையாடல் யாழ். மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் (காணி) க. ஸ்ரீமோகனன் தலைமையில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது உள்ளூராட்சி அதிகாரசபைத் தேர்தலில் அஞ்சல்மூல வாக்களிப்பு வாக்குகளை விநியோகிக்கும் கடமைகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்களுக்கான கடமைகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக உதவித்தேர்தல் ஆணையாளர் இ. சசீலனால் விளக்கமளிக்கப்பட்டது. (ச-41-27,66)

# பனைஅபிவிருத்திச் சபைக்கு புதிய பதில் பொது முகாமையாளர்

யாழ்ப்பாணம், ஏப்.6

பெருந்தோட்ட மற்றும் சமூகக் கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் செயலாளரினால் பனை அபிவிருத்திச் சபைக்கு, கோப்பாய் பிரதேச செயலகத்தின் உதவிப் பிரதேச செயலாளராக கடமையாற்றிய திருமதி உ. சிவகாமி பதில் பொது முகாமையாளராக கடந்த வியாழக்கிழமை நியமிக்கப்பட்டுள்ளார். பதவியேற்பு நிகழ்வில் பனை அபிவிருத்திச் சபையின் பணியாளர்கள் மற்றும் சபை உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-41-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டில்லி கலை இலக்கியப் பேரவையின் தமிழ் கலை இலக்கிய மாநாடு யாழில்



**யாழ்ப்பாணம், ஏப்.6**

**யாழ். இந்தியத் துணைத்தூதரகம் மற்றும் டில்லி கலை இலக்கியப் பேரவை நடத்தும் இரண்டாவது தமிழ் கலை இலக்கிய மாநாடு எதிர்வரும் 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.**

நிகழ்வில் சிறப்பு அழைப்பாளர்களாக சேலம் ஆர். ஆர். பிரியாணி நிறுவர் ஆர்.ஆர். தமிழ்ச்செல்வன், திரைப்பட இயக்குநரும் தமிழறிஞருமான பாரதி கிருஷ்ணகுமார், முனைவர் இரா.மாது, முனைவர் சரண்யா ஜெயக்குமார், டில்லி கலை இலக்கியப் பேரவைத் தலைவர் கலாநிதி கே.குமரன், டில்லி கலை இலக்கிய பேரவை செயலாளர் பா.குமார், டில்லி தமிழ்ச் சங்க பொதுச் செயலாளர் இரா.முகுந்தன், டில்லி கலை இலக்கியப் பேரவைத் தலைவர் பாலமுருகன், டோக்கியோ தமிழ்ச் சங்கத் தலைவர் க.ஹரிநாராயணன், குஜராத் வடோதரா தமிழ்ச் சங்கத் தலைவர் கண்ணன், இலண்டன் தமிழோசை தலைவர் ஞானமுருகன், டில்லி தமிழ் வழக்கறிஞர்கள் சங்க செயலாளர் ராம் சங்கர், த ராசா நிறுவனத் தலைவர் ஜெ.ராஜேஸ், டில்லி கலை இலக்கியப் பேரவை துணைத் தலைவர் தொகுப்பாளர் திருமதி புவனா வெங்கட், தாய்த் தொண்டு மையம், தாய் தொலைக்காட்சி நிறுவுநர் தாய் ராசி.ஜெகதீஸ்வரன் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.

இதுதொடர்பில் யாழ்ப்பாணம் வருகைதந்துள்ள டில்லி கலை இலக்கியப் பேரவையின் செயலாளர் பா.குமார் தெரிவிக்கையில்,

டில்லியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு எமது கலை இலக்கியப் பேரவையின் மாநாட்டை நடத்துவதற்காக நாம் வந்துள்ளோம்.

இந்திய - இலங்கை கலைஞர்களை ஒன்றிணைத்து ஒரே மேடையில் இந்த நிகழ்வை நடத்தவுள்ளோம். இது இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான மொழி, பண்பாடு, கலாசாரப் பாலமாக அமையும்.

யாழ்ப்பாணம்தான் இன்னமும் தமிழ் மொழியின் செழுமையையும் பண்பாட்டையும் பேணிப் பாதுகாக்கும் இடமாக இந்தியர்களாகிய நாம் எண்ணுகின்றோம். எனவே யாழ்ப்பாணத்தில் எமது கலை இலக்கிய மாநாட்டை நடத்துவதில் பெருமையும் அடைகின்றோம்.

எந்தவிதக் கட்டணமுமின்றி இலவசமாக இந்த நிகழ்வை எல்லோரும் பார்வையிட ஏற்பாடுசெய்துள்ளோம், நிகழ்வை பார்வையிட அனைவரையும் அழைக்கின்றோம் - என்றார். (ச)

## மாணவி கூட்டு வன்கொடுமை 5 மாணவர்கள் கைது

கொழும்பு, ஏப்.6

15 வயது மாணவியைக் கூட்டுப்பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்திய பாடசாலை மாணவர்கள் ஐவர் உள்ளிட்ட 7 பேரை ஹோமாகமப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் 15 முதல் 16 வயதுக்குட்பட்ட பாடசாலை மாணவர்கள் மற்றும் 17 முதல் 19 வயதுக்குட்பட்டவர்களாவர்.

சந்தேகநபர்களில் பாதிக்கப்பட்ட சிறுமியின் காதலனும் உள்ளடங்குகின்றார்.

பாதிக்கப்பட்ட சிறுமி, அவரது பெற்றோருடன் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று வழங்கிய முறைப்பாட்டுக்கு அமைவாக இந்தக் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ச-இ)



## முன்னாள் ஜனாதிபதிகள் நால்வர் திடீர் சந்திப்பு?

கொழும்பு, ஏப்.6

நாட்டின் முன்னாள் ஜனாதிபதிகள் நான்கு பேர் நாளை திங்கட்கிழமை கலந்துரையாடலில் ஈடுபடவுள்ளனரெனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கொழும்பிலுள்ள ஹோட்டல் ஒன்றில் பிற்பகல் வேளையில் இந்த சந்திப்பு இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அதற்கமைய, முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ச, மைத்திரிபால சிறிசேன மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரே இந்தச் சந்திப்பில் ஈடுபடவுள்ளனர். இலங்கை மீது அமெரிக்கா விதித்த 44 சதவீத வரிகள் மற்றும் அதற்குப் பதிலளிக்கும் நடவடிக்கைகள் குறித்து இதன்போது விவாதிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை முன்னாள் ஜனாதிபதிகளின் திடீர்ச்சந்திப்பு தென்னிலங்கை அரசியல் மட்டத்தில் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளதுடன் பேசுபொருளாகியும் உள்ளது. (ச-இ)

## மியான்மருக்கு முப்படைக்குழு

கொழும்பு, ஏப். 6

நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட மியான்மர் மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக மூன்று குழுக்கள் அடங்கிய முதல் சிறப்பு விமானம் மியான்மருக்குப் புறப்பட்டுள்ளது.

மருத்துவர்கள் குழு, மீட்புக்குழு, நிவாரணக்குழு ஆகிய மூன்று குழுக்களே நேற்று பயணம் மேற்கொண்டுள்ளன. (ச-இ)



## கற்பக இதழ் வெளியீடு

யாழ்ப்பாணம், ஏப். 6

யாழ். மாவட்ட பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசத்தால் வெளியிடப்பட்டுவரும் கற்பகம் பத்திரிகையின்-110 ஆவது இதழ் அச்சுவேலி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கத்தில் கடந்த வியாழக்கிழமை வெளியிடப்பட்டது. (ச-41-63)



## மோடிக்காக திரையிடப்பட்ட 'சுந்தரகாண்ட நாடகம்'

கொழும்பு, ஏப். 6

இலங்கைக்கு வருகைதந்துள்ள இந்தியப் பிரதமருக்கு இராமாயண இலக்கியத்தின் சுந்தரகாண்டத்திலுள்ள சில பகுதிகளை எடுத்துக்காட்டும் ஒரு பொம்மலாட்ட நிகழ்ச்சி நேற்று நடத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி தெரிவிக்கையில்,

சுந்தரகாண்டத்தின் சில பகுதிகளை எடுத்துக்காட்டும் ஒரு பொம்மலாட்ட நிகழ்ச்சியின் காட்சிகளைக் கண்டுகளித்தேன். இதனை ஏற்பாடுசெய்த பொம்மலாட்டச் சங்கத்தினருக்கும், அவர்களின் ஆர்வத்துக்கும் எனது பாராட்டுகள் - என்றார். (ச-இ)



சாவகச்சேரி நுணாவில் வீரபத்திர விநாயகர் கோவில் வருடாந்த பெருந் திருவிழா நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து பத்து தினங்கள் உற்சவங்கள் நடைபெறவுள்ளன. (ச-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடிகர் ரவிக்குமார் காலமானார்

இயக்குநர் கே.பாலசந்தரின் 'அவர்கள்', 'பகலில் ஒரு இரவு' படங்கள் மற்றும் சித்தி, வாணிராணி உட்பட பல்வேறு தொலைக்காட்சி தொடர்களில் நடித்த பிரபலமான நடிகர் ரவிக்குமார் தனது 71வயதில் உடல்நலக்குறைவால் உயிரிழந்துள்ளார். அவரது மறைவுக்குத் தமிழ் மற்றும் மலையாள திரை உலகினர் இரங்கல் தெரிவித்துவருகின்றனர். (ச-இ)

## வல்லை முதியோர் இல்லம்

வீட்டுச் சூழலில் கனிவு நிறைந்த உபசரிப்புடன் சுகாதாரமாகத் தயாரிக்கப்பட்ட நிறை உணவு வழங்குகின்ற வல்லை முதியோர் இல்லம் புதிய முதியவர்களை இணைப்பதற்கு தயாராக உள்ளது.

இல்லத்தில் இணைய விரும்பும் முதியவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

நிர்வாகி:- 077 810 6857
077 154 2067
021 226 5551

## காணி விற்பனைக்கு

வவுனியா ஓமந்தையில் 10 ஏக்கர் உறுதியுடனான காணி விற்பனைக்கு உண்டு. 559 தென்னை மரங்கள், தேசிக்காய் மரங்கள், 12 கறுத்தக்கொழும்பான் மா மரங்கள், 12 விலாட்டு மா மரங்கள், செர்ரி, பலா, ஜம்பு போன்ற மரங்கள், 3 Cottages, 1 பணியாளர் அறை, 1 Hunt cottage, 7000 Broiler cottages, 100 Goat Cottage, 2 கிணறுகள் மற்றும் பல வசதிகளுடன்

தொடர்பு : 077 060 4125
Whatsapp: 076 367 8333

(CR/44763) J-1

## மணமகன் தேவை

1983, இந்து, மூலம், TEACHER
பூர்வீகம் - இளவாலை, வதியுமிடம் - யாழ்ப்பாணம்
மணமகள் பதிவு இல: 10864.
திருமணம் சரி வரும்போது தரகர் கூலி ஏதும் இல்லை
50 % புத்தாண்டு விலைக்கழிவு, 10.04.2025 வரை
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401
www.EQMarriageService.com

## மணமகள் தேவை

1993, இந்து, சதயம், DOCTOR
பூர்வீகம் - இணுவில், வதியுமிடம் - CANADA
மணமகன் பதிவு இல: 11551.
திருமணம் சரி வரும்போது தரகர் கூலி ஏதும் இல்லை
50 % புத்தாண்டு விலைக்கழிவு, 10.04.2025 வரை
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401
www.EQMarriageService.com

## மணமகன் தேவை

1997, இந்து, ஸ்வாதி, DOCTOR
பூர்வீகம் - யாழ்ப்பாணம், வதியுமிடம் - திருகோணமலை
மணமகள் பதிவு இல: 11059.
திருமணம் சரி வரும்போது தரகர் கூலி ஏதும் இல்லை
50 % புத்தாண்டு விலைக்கழிவு, 10.04.2025 வரை
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401
www.EQMarriageService.com

## மணமகன் தேவை

1986, இந்து, கார்த்திகை, ENGINEER
பூர்வீகம் - வயாவிளான், வதியுமிடம் - யாழ்ப்பாணம்
மணமகள் பதிவு இல: 10719.
திருமணம் சரி வரும்போது தரகர் கூலி ஏதும் இல்லை
50 % புத்தாண்டு விலைக்கழிவு, 10.04.2025 வரை
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401
www.EQMarriageService.com

## மணமகள் தேவை

1992, இந்து, ஆயிலியம், CIVIL ENGINEER
பூர்வீகம் - மிருசுவில், வதியுமிடம் - AUSTRALIA
மணமகன் பதிவு இல: 11048.
திருமணம் சரி வரும்போது தரகர் கூலி ஏதும் இல்லை
50 % புத்தாண்டு விலைக்கழிவு, 10.04.2025 வரை
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401
www.EQMarriageService.com

## மணிவிழா வாழ்த்து




எமது பாடசாலையில்
பிரதி அதிபராக (நிர்வாகம்) கடமையாற்றி
60 ஆவது அகவை காணும்

**திருமதி றெனிஸ் கிளாஸ்**
**விஜயவதி றெஜினா**
**(T.V. றெஜினா)**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு அவரது ஓய்வுக்காலம் சிறக்க வாழ்த்துகின்றோம்.

சேவைக் காலம்.

- மன் / அடம்பன் மத்திய மகா வித்தியாலயம் - 21.01.1998 - 15.02.2010
- மன் / ஆண்டான் குளம் R.C. T.M.S - 16.02.2010 - 09.01.2018
- மன் / அடம்பன் மத்திய மகா வித்தியாலயம் - 10.01. 2018 - 06.04.2025

வாழ்த்துவோர்:
அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்
**மன்/ அடம்பன் மத்திய மகாவித்தியாலயம்**

(CS/57915) J-1

## வீட்டுப்பணிப்பெண் தேவை

ஆனைப்பந்தி
யாழ்ப்பாணத்தில்
வயோதிவப் பெண்
ஒருவரை பராமரிப்பதற்கு
வீட்டுப் பணிப்பெண்
தேவை.

077 993 5844

## கோவில் வேலைவாய்ப்பு

கொழும்பு - 10, மருதானையிலுள்ள
பிள்ளையார் கோவிலுக்கு

**பிரதம குரு, உதவி ஐயர், கணக்குப்பிள்ளை, பல வேலைக்காரர், மடப்பள்ளி**

போன்ற வேலையாட்கள் தேவை. விரும்புபவர்கள் 15.04.2025 முன் கீழ்கொடுக்கப்பட்டுள்ள What'sapp / Telephone இலக்கத்திற்கு கதைக்கவும். தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கு தங்குமிடத்துடன் தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

0777 562013 | 0777 314949
What'sapp only

உ

## யாழ் அத்தியடி அருள்மிகு

## ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்திப் பிள்ளையார் கோயில்

## பெருந்திருவிழா - 2025



விநாயகப் பெருமான் மெய்யடியார்களே!

மேற்படி திருக்கோயிலின் வருடாந்த பெருந்திருவிழா நிகழும் குரோதி ஆண்டு பங்குனித் திங்கள் 23 ஆம் நாள் (06.04.2025) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு கொடியேற்ற திருவிழாவுடன் ஆரம்பமாகி, சித்திரைத் திங்கள் 4 ம் நாள் (17.04.2025) வியாழக்கிழமையுடன் நிறைவுபெற எல்லாம் வல்ல அத்தியடி ஸ்ரீ சிதம்பர நடராஜா வீரகத்தி பிள்ளையாரின் திருவருள் கூடியுள்ளது.

### பகல் திருவிழா

- அபிஷேக ஆரம்பம் - காலை 08.30 மணி
- கொடிமரப் பூசை - காலை 10. 15 மணி
- வசந்த மண்டப பூசை - காலை 11.00 மணி

தொடர்ந்து உள்வீதி உலா நடைபெறும்.



### இரவுத் திருவிழா

- அபிஷேக ஆரம்பம் - பிற்பகல் 04.00 மணி
- கொடிமரப் பூசை - பிற்பகல் 05.15 மணி
- வசந்த மண்டப பூசை - மாலை 6.00 மணி

தொடர்ந்து உள்வீதி, வெளிவீதி உலா நடைபெறும்.

**விசுவாவசு தமிழ் புத்தாண்டுப் பிறப்பு பூசை - 14.04.2025 திங்கட்கிழமை அதிகாலை 2.29 மணி**

**தேர்த்திருவிழா 14.04.2025 திங்கட்கிழமை**
- வசந்த மண்டப பூசை காலை 8.00 மணி
- எம்பெருமான் கோபுர வாசலில் எழுந்தருளல் காலை 9.00 மணி
- தேர்ப்பவனி ஆரம்பம் காலை 9.30 மணி.

**பெருந்திருவிழா பிரதமகுரு**
மஹோற்சவ ரதி பிரகாசம்
லலிதா தீபாராதனை
கலாநிதி சிவஸ்ரீ
மணிநாத ரிஷாந்த குருக்கள்

**தீர்த்தத் திருவிழா**
**15.04.2025 திங்கட்கிழமை**
வசந்த மண்டப பூசை காலை 10.00 மணி
தீர்த்தம் காலை 11.00மணி

மைதிலி நகைமாடம் யாழ் மைதிலி ஜுவல்லர்ஸ்
தங்கநகை வியாபாரி
என்றும் மங்கிடா தரம் குன்றிடாதங்க நகைகளின்சாம்ராஜ்யம்





89V கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P: 021 222 7902
79Z செட்டியார் தெரு, கொழும்பு - 11 T.P: 011 239 6239
E - mail : maithilynagaimaadam89@gmail.com

**சர்வ சாதகர்கள்**
சிவஸ்ரீ ச.துராகீஷ குருக்கள்
சிவஸ்ரீ செ.அருண் பிரசாத் குருக்கள்

**யாக சம்ராஜ்கர்கள்**
பிரம்மஸ்ரீ செ. குகேஸ்வர சர்மா
பிரம்மஸ்ரீ ர. சயந்தன் சர்மா
பிரம்மஸ்ரீ ச.சிவசங்கர சர்மா

**யாகசாலை**
பிரம்மஸ்ரீ
கோகுலம் சர்மா

**கோயில் நித்திய பூசகர்**
பிரம்மஸ்ரீ
பூஷ்ப தனுராஜ சர்மா

**மங்கள வாத்தியம்**
ஈழ நல்லூர்
பரந்தாமன் குழுவினர்

**எம்பெருமான் அலங்காரம்**
திரு.குகதாசன்
நல்லூர்

**பகல் திருவிழாவின் பின்பு அன்னதானம் வழங்கப்படும்**

கோயிலில் அடியார்கள் சைவத்தமிழ்ப் பண்பாட்டைத் தவறாது கைக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்

பிள்ளையார் பணியில் நிற்கும்
கோயில் நிர்வாகம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆயுள்வேத பாரம்பரியம் வளர்க்கப்படவேண்டும்

## மன்னார் மாவட்டச் செயலர் தெரிவிப்பு

ஆயுள்வேதத்துறை வளர்க்கப்படவேண்டும் என்பதுடன் இதனைப் பாதுகாத்து - ஒவ்வொரு வைத்தியர்களின் திறமைகளும் ஆவணப்படுத்தப்பட்டு - அடுத்த சந்ததிக்கு மாற்றப்படவேண்டும் என்று மன்னார் மாவட்டச்செயலர் க.கனகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்ட ஆயுள்வேத பாதுகாப்புச்சபைக் கூட்டம் மாவட்டச்செயலகத்தில் நடைபெற்றபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார். ஆயுள்வேத பாரம்பரிய வைத்தியத்தை மாவட்டத்தில் வளர்க்க வேண்டும். வளர்ந்துவரும் இளம் சுதேசவைத்தியர்களையும் ஊக்கப்படுத்த வேண்டும். மேலும் சுதேசவைத்தியத்தைப் பாதுகாத்து வளர்க்கவேண்டிய பொறுப்பு எமக்குள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-33-213)

# தாக்குதல்

றொறண்டோ, ஏப்.6 கனடாவில் றொறண்டோ பகுதியிலுள்ள ஸ்ரீ கிருஷ்ணா பிருந்தாவனம் கோவில் தாக்கப்பட்டுள்ள நிலையில் சந்தேகநபர்களைத் தேடி அந்த நாட்டுப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-இ)

**உடனடி வெளிநாட்டு பயணம்**

**Work Visa and Visit Visa**

லண்டன்
பிரான்ஸ்
இத்தாலி
ஜேர்மன்
மாலைதீவு
மலேசியா

விசா ஆலோசனைகளும் வழங்கப்படும்

உடனடி தொடர்புகளுக்கு :
077 457 3783

(CR/44762) J-1

வீணாக யாரிடமும் பணம் கொடுத்து ஏமாறாதீர்கள்

**வீடுகளுடன் 2 காணிகள் விற்பனைக்கு**

மன்னார் நகருக்கு மிக அருகில் 200m அம்மன் கோவில் வீதி, உப்புகுளத்தில் ( பிள்ளையார் கோயில் வீதியிலும் முகப்பை கொண்ட) சித்தி விநாயகர் இந்து வித்தியாலயத்துக்கு அருகில் வீடுகளுடன் 2 காணிகள் விற்பனைக்கு உண்டு.
23.25p மற்றும் 24.33 p (47.58 p)
விலை 47 M (Negotiable)
காணிகள் தனித்தனியாகவோ/ ஒன்றாகவோ விற்கப்படும்.

தொடர்பு:- 071 846 3052

**வீட்டுடன் காணி விற்பனைக்கு**

யாழ். மருதடி வீதியில் 3 பரப்புக் காணியில் அமைந்துள்ள வீடு விற்பனைக்கு உண்டு.
தரகர் தேவையில்லை.
தொடர்புகளுக்கு
சுகுமார்:- 076 881 2077
v3sugumar@gmail.com

# மரண அறிவித்தல்

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

மண்ணில் 20 . 02 . 1958



விண்ணில் 02 . 04 . 2025

**திருமதி வசந்தமலர் தர்மராசா**

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், ஆதிவிநாயகர் கோவிலடி, அளவெட்டி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட வசந்தமலர் தர்மராசா அவர்கள் கடந்த 02.04.2025 புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.04.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக அளவெட்டி கொட்டுப்பனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அளவெட்டி ஆதிவிநாயகர் கோவிலடி,
அளவெட்டி மேற்கு.

தகவல் :
குடும்பத்தினர்

(CS/2899) J-1

# COOL AIR {AIR CONDITIONERS}



9000 Btu முதல் 60000 Btu வரை
Wall Mounted /Floor Standing / Ceiling Mound/Cassette type
Hotel /Home /Wedding Hall /Shop


இதற்குரிய சகலவிதமான குளிரூட்டிகளும்
Inverter Model குளிரூட்டிகள், Non-Inverter Model குளிரூட்டிகள்


DAIKIN, MIDEA, PANASONIC, CHIGO, HITACHI, SHARP ஆகிய வகைகளிலும் குளிரூட்டிகள் விற்பனை உண்டு.

| | | |
|---|---|---|
| DAIKIN NON-INVERTER | 9000 Btu | - 150,000.00 |
| | 12000 Btu | - 160,000.00 |
| | 18000 Btu | - 205,000.00 |
| | 24000 Btu | - 235,000.00 |
| INVERTER | 9000 Btu | - 175,000.00 |
| | 12000 Btu | - 185,000.00 |
| | 18000 Btu | - 220,000.00 |
| | 24000 Btu | - 295,000.00 |
| PANASONIC INVERTER | 12000 Btu | - 220,000.00 |
| HITACHI INVERTER | 9000 Btu | - 200,000.00 |
| | 12000 Btu | - 210,000.00 |
| | 18000 Btu | - 280,000.00 |
| | 24000 Btu | - 340,000.00 |
| CHIGO NON -INVERTER | 12000 Btu | - 150,000.00 |
| | 18000 Btu | - 190,000.00 |
| | 24000 Btu | - 245,000.00 |

Sharp

| | | |
|---|---|---|
| NON-INVERTER | 9000 Btu | - 140,000.00 |
| | 12000 Btu | - 150,000.00 |
| | 18000 Btu | - 193,000.00 |
| | 24000 Btu | - 248,000.00 |
| INVERTER | 13000 Btu | - 166,000.00 |
| | 18000 Btu | - 220,000.00 |
| | 24000 Btu | - 295,000.00 |





- 03-meter copper pipe free
- 01-year full Unit warranty
- Installation Free
- 03 free Service
- 05-year compressor warranty
- Outdoor Bracket Free

எமது சேவைகள்
- குளிரூட்டி பொருத்துதல்
- குளிரூட்டி திருத்த வேலைகள்
- குளிரூட்டிகள் சேர்விஸ் செய்தல்

முகவரி
477, K.K.S ROAD, TELLIPPALAI.
தொடர்புகளுக்கு:
077 773 8888, 077 217 6413
021 438 8808

(CS/57927) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் · 14 · 03 · 1940



மறைவு · 04 · 04 · 2025

## அருளம்பலம் மலர்சோதி

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் இணுவில் கிழக்கு அங்களப்பாயை வதிவிடமாகவும் கொண்ட அருளம்பலம் மலர்சோதி நேற்றுமுன்தினம் (04.04.2025) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான முத்துத்தம்பி - சிவகாமிப்பிள்ளை தம்பதிய ரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற அருளம்பலம் அவர்களின் அன்பு மனைவியும், அருள்சோதியின் அன்புத் தாயாரும், மதிவாணியின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான பாலசிங்கம், இராஜதுரை மற்றும் ஜெகசோதி, தங்கராசா, ரவீந்திரராசா, பவளம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், பஞ்சநாதன், அன்னப்பிள்ளை, சிதம்பரேஸ்வரி மற்றும் சின்னத்தங்கச்சி ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற சிவப்பிரகாசம் மற்றும் சறோஜினிதேவியின் சம்பந்தியும், அபிசனா, துஷானா, ரவிஸ்ணா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.04.2025) ஞாயிற்றுகிழமை முற்பகல் 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அங்களப்பாய்,
இணுவில் கிழக்கு.

தகவல்:
குடும்பத்தினர்
077 5016 454

(cr.44766) (N-1)

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் திருமதி பத்மாவதி துரைராஜா

(இளைப்பாறிய உயிரியல் ஆசிரியை,
இந்து மகளிர் கல்லூரி)

நான்காண்டு கடந்ததே உங்கள் குரல் ஓய்ந்து
உங்கள் குரல் எங்கள் நினைவில் நிலைத்திருக்க
ஆலமரமாய் நின்று எம்மை வழிகாட்டினீர்கள்
அன்போடு பாசத்தையும் எமக்கு அளித்தீர்கள்
பார்க்கும் இடம் எல்லாத்திசையும் உங்கள்
உருவமே தெரிகின்றது
ஆண்டுகள் பல சென்றாலும் அகலாது
உங்கள் நினைவலைகள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

49, பலாலி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

நினைவுகளுடன்
பிள்ளைகள்

(CS/57896) J-1

## ஆதரவற்ற குழந்தைகள் காஸாவில் அதிகரிப்பு

காஸா, ஏப்.6

போர் காரணமாக பெற்றோரை இழந்த குழந்தைகள் அதிகம் கொண்ட பகுதியாக காஸா மாறியுள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அங்கு கடந்த 544 நாள்களாக போர் நடைபெற்றுவருகிறது. போரில் இதுவரை 50,523 பலஸ்தீனர்கள் உயிரிழந்துள்ளனர்.

பலஸ்தீன அரசு வெளியிட்டுள்ள புள்ளிவிவரங்களின்படி, 39,384 குழந்தைகள் தங்கள் பெற்றோரில் ஒருவரையாவது இழந்திருக்கிறார்கள் என்றும், இதில் 17 ஆயிரம் குழந்தைகள் பெற்றோரில் இருவரையும் இழந்திருக்கிறார்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

(ச-இ)

# மரண அறிவித்தல்

தோற்றம் · 21 · 07 · 1950



மறைவு · 05 · 04 · 2025

## பராலக்சுமி அரசரட்ணம்

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பராலக்சுமி அரசரட்ணம் நேற்று (05.04.2025) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா - இராசமணி தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்ற இராமநாதன் அரசரட்ணம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, பஞ்சரத்தினம், பத்மனாவதி மற்றும் பராசக்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும், அமிர்தவர்ஷினி, அர்ச்சனா ஆகியோரின் அன்புத் தாயாரும், சுதர்ஷன், கோபிநாத் ஆகியோரின் மாமியாரும், சுபிக்ஷினி, வராகினி, சுபிசன், தருண் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.04.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 22 சிவகுரு வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்
077 990 4941, 077 627 7237

(cs.57928) (N-1)

# மரண அறிவித்தல்



## சற்குணரத்தினம் (செல்வம்)

மடத்தடி சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும், தெல்லிப்பளையை வசிப்பிடமாகவும் கொண்ட சற்குணரத்தினம் (செல்வம்) அவர்கள் நேற்றுமுன்தினம் (04.04.2025 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா (ஜோன்) - மாணிக்கம் (பேச்சி) தம்பதியரின் புதல்வனும், காலஞ்சென்றவர்களான உருத்திராவதி - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், கமலாதேவி அவர்களின் அன்புக் கணவரும், திலக்சன் (பிரான்ஸ்), திவ்வியா ஆகியோரின் அன்புத் தந்தையும், சற்குணதேவி, காலஞ்சென்ற சற்குணலிங்கம், சந்திரகுமார், சந்திரசேகரன் (லண்டன்), சௌந்தரராஜன் (ஜேர்மனி), சரோஜாதேவி (சாந்தி - கனடா), சைலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவஞானம், செல்வஞானம், ஆனந்தராசா (கனடா), தங்கவேல் (லண்டன்), இராசையா, புஸ்பராணி, அமிர்லீலா, யோகேஸ்வரி (றதி), தாரணி, கமலதாஸ், காந்தராசா, உதயகுமார் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.04.2025) ஞாயிற்றுக்கிழமை தெல்லிப்பளையில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக முற்பகல் 11.00 மணியளவில் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

[illegible]டம்,
தெல்லிப்பளை.

தகவல் : குடும்பத்தினர்
077 089 9940, 077 336 3540

(CS/2898) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# புதிய கட்டடத்தில் பருத்தித்துறை பொதுச்சந்தை

யாழ்ப்பாணம், ஏப். 6



பருத்தித்துறை மரக்கறி பொதுச்சந்தை இடமாற்றத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து வியாபாரிகள் மேற்கொண்ட பணிப்புறக்கணிப்பு கைவிடப்பட்டுள்ளது. இதனையடுத்து புதிய பொதுச்சந்தைக் கட்டடத்தில் வியாபார நடவடிக்கைகள் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமைமுதல் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

பருத்தித்துறை நகரின் மத்தியில் அமைக்கப்பட்ட கட்டடத்தில் இதுவரை இயங்கிவந்த பொதுச்சந்தையை புதிய கட்டடத்துக்கு இடமாற்றம் செய்ய பருத்தித்துறை நகரசபையால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அதற்கு வியாபாரிகள் எதிர்ப்புத் தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். மரக்கறி வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு ஒதுக்கப்பட்டுள்ள இடப்பரப்பு போதாது என வியாபாரிகளால் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்தநிலையில் குறித்த இடப்பரப்பை அதிகரித்துக் கொடுக்கவும், பருத்தித்துறை நகரசபையின் கட்டுப்பாட்டிலுள்ள முதலாம் குறுக்குத்தெரு வீதியின் ஒரு வழிப்பாதைக் கட்டுப்பாட்டை நீக்கி இருவழிப் பயணமாக்கவும் பருத்தித்துறை நகரசபையால் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. அதனையடுத்து போராட்டத்தை கைவிட்ட வியாபாரிகள் புதிய கட்டடத்தில் வியாபாரத்தை ஆரம்பித்துள்ளனர். (ச-25,100)

# கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஏப். 6

யாழ்ப்பாணம், வரணி தான்தோன்றிக் கண்ணகை அம்மன் ஆலய மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 10ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.10 மணிமுதல் 10.10 மணிவரை நடைபெறவுள்ளது. மகா கும்பாபிஷேகப் பூர்வாங்கக் கிரியைகள் நாளை திங்கட்கிழமை அதிகாலை 6 மணிமுதல் ஆரம்பமாகவுள்ளன. எதிர்வரும் 9ஆம் திகதி புதன்கிழமை மதியம் 12 மணிமுதல் மாலை 6 மணிவரை எண்ணெய்க்காப்புச் சாத்தும் நிகழ்வு இடம்பெறும் என்றும் ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (ச-41-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலையக...

சுகாதார வசதிகளுக்கு இந்தியா ஆதரவு வழங்கும் என்று மலையகப் பிரதிநிதிகளுடனான சந்திப்பில் இந்தியப் பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.
பிரதமர் மோடிக்கும், மலையகத்தைச் சேர்ந்த தமிழ்ப் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று இடம்பெற்றது. இதன்போதே, மலையக மக்களுக்குப் 10 ஆயிரம் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படும் என்ற உத்தரவாதத்தை பிரதமர் மோடி வழங்கியுள்ளார். அத்துடன், சுகாதார வசதிகள், சீதை அம்மன் ஆலய நிர்மாணம் ஆகிய பணிகளுக்கும் இந்தியா ஒத்துழைப்பு வழங்கும் என்றும் பிரதமர் மோடி கூறியுள்ளார். (அ-ம-இ)

## தமிழ்...

இலங்கைக்கு வந்துள்ள பிரதமர் மோடி, இலங்கை இந்திய நாடுகளுக்கு இடையிலான உயர்மட்டப் பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து உரையாற்றினார். இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-
இன்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவால் 'இலங்கை மித்ர விபூஷணம்' விருது எனக்கு வழங்கப்பட்டது மிகவும் பெருமைக்குரிய விடயமாகும். இந்த விருது என்னைக் கௌரவிப்பது மட்டுமல்லாமல், 140 கோடி இந்தியர்களையும் கௌரவிக்கிறது. இது இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான வரலாற்று உறவுகள் மற்றும் ஆழமான நட்புக்கு ஒரு மரியாதை. இந்தக் கௌரவத்துக்காக ஜனாதிபதிக்கும், இலங்கை அரசாங்கத்துக்கும், இலங்கை மக்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
பிரதமராக, இது இலங்கைக்கு எனது நான்காவது வருகை. 2019 ஆம் ஆண்டில் எனது கடைசி வருகை மிகவும் உணர்ச்சிகரமான நேரத்தில் அமைந்தது. இலங்கை எழுச்சிபெறும், மேலும் வலுவாக மீண்டெழும் என்று அப்போது நான் நம்பினேன். இலங்கை தொடர்பான எனது நம்பிக்கை மிகவும் உறுதியாக இருந்தது. அந்த நம்பிக்கையை இலங்கை இன்று நிறைவேற்றியுள்ளது. இலங்கை மக்களின் தைரியத்தையும் பொறுமையையும் நான் பாராட்டுகிறேன். இன்று, இலங்கை மீண்டும் முன்னேற்றப் பாதையில் செல்வதைக் கண்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

**மோடியின் திருக்குறள்**
2019ஆம் ஆண்டு பயங்கரவாதத் தாக்குதலாக இருந்தாலும் சரி, கொரோனா தொற்றுநோயாக இருந்தாலும் சரி, சமீபத்திய பொருளாதார நெருக்கடியாக இருந்தாலும் சரி, ஒவ்வொரு சிரமத்தின் போதும் இலங்கை மக்களுடன் நாங்கள் உறுதியாக நின்றுள்ளோம்.
தமிழ் மகான் திருவள்ளுவரின் வார்த்தைகள் எனக்கு நினைவுக்கு வருகின்றன. 'செயற்கரிய யாவுள நட்பின் அதுபோல் வினைக்கரிய யாவுள காப்பு' அதாவது, சவால்கள் மற்றும் எதிரிகளை எதிர்கொள்ளும்போது, ஒரு உண்மையான நண்பனையும் அவனது நட்பின் கேடயத்தையும்விட வலுவான உறுதிப்பாடு எதுவும் இல்லை. இதற்கு இலக்கணமாக இந்தியாவும் இலங்கையும் அமைந்துள்ளன.
ஜனாதிபதி அநுர ஜனாதிபதியான பிறகு தனது முதல் வெளிநாட்டு பயணத்துக்கு இந்தியாவைத் தேர்ந்தெடுத்தார், அவருடைய முதல் வெளிநாட்டு விருந்தினராக வரும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. இது நமது சிறப்பு உறவுகளின் ஆழத்தின் அடையாளமாகும். எமது அண்டை நாடுகளுக்கு முன்னுரிமை அளிக்கும் கொள்கை மற்றும் 'மகாசாகர்' என்ற தொலைநோக்குப் பார்வை இரண்டிலும் இலங்கைக்கு சிறப்பு இடம் உண்டு. ஜனாதிபதி அநுரவின் இந்திய வருகைக்குப் பிறகு, கடந்த நான்கு மாதங்களில், எமது ஒத்துழைப்பில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளோம். இந்த முன்னேற்றம் தொடரவேண்டும் - என்றார். (அ-ம-இ)

## இந்திய...

சந்திப்பின் பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
மீனவர்களின் விடயத்தில் மனிதாபிமான அணுகுமுறையுடன் நாங்கள் முன்னேறவேண்டும் என்பதை நான் வலியுறுத்த விரும்புகின்றேன். ஆதலால், இலங்கையில் சிறைவைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களை விடுவித்து, அவர்களின் படகுகளை திருப்பி அனுப்ப வேண்டும் என்று கோருகின்றேன் - என்றார். (அ-ம-26-125)

## மாகாணசபைத்...

இடையிலான சந்திப்பில் இடம்பெற்ற விடயங்கள் தொடர்பில் புளொட் அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டுள்ளார். இதன்போதே, மாகாணசபைத் தேர்தல் நிச்சயம் இடம்பெறும் என்று அநுர அரசாங்கம் வாக்குறுதி வழங்கியுள்ளதாக பிரதமர் மோடி தமிழ்த் தலைவர்களிடம் தெரிவித்ததார் என சித்தார்த்தன் கூறியுள்ளார். (அ-ம-125)

## இலங்கையில்...

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பிரதிநிதிகள், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பிரதிநிதிகள் மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பிரதிநிதிகள் ஆகியோருக்கும், பிரதமர் மோடிக்கும் இடையிலான சந்திப்பு நேற்று மாலை இடம்பெற்றுள்ளது. இதன்போதே, இலங்கையில் சமஷ்டி ஆட்சி ஏற்படுத்தப்பட வேண்டியதன் அவசியம் தொடர்பில் தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.
இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மேலும் தெரிவித்ததாவது:-
இலங்கையைத் தனது தேசியப் பாதுகாப்புடன் தொடர்புபடுத்தி அணுகக்கூடிய ஒரேயொரு நாடு இந்தியா மட்டுமே. இந்த விடயத்தை நாங்கள் மிகவும் ஆணித்தரமாக வலியுறுத்துகின்றோம். குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கில் அந்த உரிமை இந்தியாவுக்கு இன்னும் அதிகம் உள்ளது.

**இழுபறியாகும் 13**
13ஆவது திருத்தச் சட்டம் என்பது இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காகக் கொண்டுவரப்பட்ட ஓர் ஆவணம் என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம். ஆனால், அந்த விடயத்தைக்கூட ஒற்றையாட்சிக்குள் கொண்டுசென்றமையால், அதை நிறைவேற்றுமாறு இந்தியாவே மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கொண்டிருக்கக் கூடிய நிலைமை காணப்படுகின்றது. 13ஆவது திருத்தத்தில் மத்திய மாநில அரசுகளுக்கு இடையில் எந்தவொரு மோதலும் ஏற்படாத வகையில் விடயங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. ஆனாலும், கடந்த 38 வருடங்களாக இந்த விடயம் தொடர்ந்து இழுத்தடிக்கப்படுகின்றமை மிகவும் துயரமாக விடயமாகும். பிரதமர் மோடி இலங்கைக்கு முதன்முதலில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போது, இங்கு கூட்டாட்சியே பொருத்தமானது என்று தெரிவித்திருந்தார். நாங்கள் அந்த நிலைப்பாட்டுடன் இணங்குகின்றோம். இதைப் பிரதமர் மோடியிடம் சுட்டிக்காட்டியுள்ளோம்.

**அத்துமீறிய மீன்பிடி**
வடக்குக் கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடுவது அதிகரித்துவருகின்றது என்ற விடயத்தையும் இந்தியப் பிரதமர் மோடியின் கவனத்துக்குக்கொண்டுசென்றுள்ளோம். இந்த அத்துமீறலைக் கட்டுப்படுத்துவதற்காக, தமிழ் நாட்டுக்குச் சென்று அங்குள்ள பிரதிநிதிகளுடன் பேச்சுகளை நடத்துவதற்குக்கூட நாங்கள் தயார் என்ற விடயத்தையும் பிரதமர் மோடிக்குத் தெளிவுபடுத்தியுள்ளோம் -என்றார். (அ-ம-125)

## இந்தியாவுக்கு...

ஜனாதிபதி அநுர மேலும் தெரிவித்ததாவது:-
'வளர்ச்சி, புதுமை மற்றும் செயற்றிறனை மேம்படுத்த டிஜிட்டல் பொருளாதாரத்தை வளர்ப்பதன் முக்கியத்துவத்தை இலங்கை அங்கீகரிக்கிறது. இந்தக் கொள்கையின் தொடக்கமாக பிரதமர் மோடியும் நானும் பல்வேறு மட்டத்தில் டிஜிட்டல் மயமாக்கலில் சாத்தியமான கூட்டாண்மை குறித்து விவாதித்தோம். இலங்கையின் தனித்துவமான டிஜிட்டல் அடையாளத் திட்டத்துக்காக இந்திய அரசு வழங்கியுள்ள நிதியுதவிக்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.
இலங்கை அரசு அவருக்கு, இலங்கையின் மிக உயரிய விருதான 'இலங்கை மித்ர விபூஷண' விருதை வழங்க முடிவு செய்துள்ளது என்பதை அறிவிப்பதில் நான் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த விருதுக்கு அவர் மிகவும் தகுதியானவர். இதனை நாங்கள் பூரணமாக நம்புகிறோம்.
இந்தியா மற்றும் இலங்கைக்கு இடையிலான உறவு மிகவும் நெருக்கமானது. நீண்டகாலத்துக்கு முன்பிருந்தே அண்டை நாடுகளான நாம் ஆழமான வரலாறு, கலாச்சாரம் மற்றும் மத ரீதியிலான உறவுகளைக் கொண்டுள்ளோம். இந்த உறவு இரு நாடுகளுக்கு இடையே பகிரப்பட்ட மதிப்பீடுகள், பரஸ்பர மரியாதை மற்றும் விருப்பங்களால் கட்டமைக்கப்பட்டுள்ளது - என்றார். (அ-ம-இ)

## இந்தியாவுடனான...

புதிய பாதுகாப்புப் புரிந்துணர்வு ஒப்பந்தம் குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பாதுகாப்புப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம், இரண்டு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு வலுப்படுத்தப்படும். இந்த ஒப்பந்தத்தின் மூலம் இரண்டு நாடுகளுக்கும் இடையில் பாதுகாப்பு சார்ந்த தொழில்நுட்ப ஒத்துழைப்பு வலுப்படுத்தப்படும். அத்துடன், அறிவியல் மற்றும் தகவல் பரிமாற்றம் என்பன மேலும் பலமாக்கப்படும். இதனைத் தவிர வருடத்துக்கு இலங்கைப் பாதுகாப்பு படைகளின் 750 பேருக்கு சிறப்பு பயிற்சிகளை இந்தியா வழங்கவுள்ளது. இந்தியாவுடன் மேற்கொள்ளப்படும் பாதுகாப்பு ஒப்பந்தத்தால் இரு நாடுகளின் தேசிய கொள்கைகளுக்கோ அல்லது சட்டக் கட்டமைப்பிற்கோ எவ்விதமான அழுத்தங்களும் ஏற்படாது. இலங்கை இந்திய புதிய பாதுகாப்பு ஒப்பந்தத்தின் கீழ் முன்னெடுக்கப்படுகின்ற நடவடிக்கைகளின்போது, இருதரப்பு தேசிய மற்றும் இராணுவச் சட்டங்கள், ஐக்கிய நாடுகள் சபையின் பிரகடனம் என்பவற்றை பாதுகாப்பதில் இரு நாடுகளும் உறுதியுடன் உள்ளன.
இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம், 5 ஆண்டுகளுக்கு நடைமுறையில் இருக்குமென முன்மொழியப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட தரப்பினர் மூன்று மாத முன் அறிவிப்பு மூலம் ஒப்பந்தத்தை முடித்துக் கொள்ளும் உரிமையும் உள்ளது - என்றார். (அ-ம)

## மாணவனைத்...

இரண்டு மாணவர்கள் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.
நாத்தாண்டிய பகுதியைச் சேர்ந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞான பீட புதுமுக மாணவன் மீது சிரேஷ்ட மாணவர்கள் தலைக்கவசத்தால் தாக்கிச் சித்திரவதை புரிந்தனர் என்று குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பாதிக்கப்பட்ட மாணவன் வழங்கிய பொலிஸ் முறைப்பாட்டுக்கு அமையவே, கோப்பாய் பொலிஸாரால் மேற்படி இரண்டுமாணவர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். மருத்துவப் பரிசோதனையில், குறித்த மாணவனின் தலையிலும், காதுப் பகுதியிலும் பெரியளவில் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன என உறுதிப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## இந்தியா - ...

நேற்று ஆரம்பித்துவைத்தனர். தேசிய மின்கட்டமைப்பில் 50 மெகாவாட்ஸ் மின்சாரத்தை இணைக்கும் சம்பூர் சூரிய மின்நிலையத்தின் பணிகள், வெப்பநிலை மற்றும் ஈரப்பதனைக் கட்டுப்படுத்தக்கூடியதம்புள்ளை விவசாயகளஞ்சியக் கட்டிடத் தொகுதி மற்றும் இந்திய அரசாங்கத்தால் நன்கொடையாக வழங்கப்பட்ட 5 ஆயிரம் மதத் தலங்களின் கூரைகளில் சூரிய மின்கலங்களை நிறுவும் திட்டம் ஆகியவையே இணையவழி தொழில்நுட்பம் மூலம் ஜனாதிபதி அநுர மற்றும் இந்தியப் பிரதமர் மோடி ஆகியோரால் திறந்துவைக்கப்பட்டன.
இவற்றில் சம்பூர் சூரிய மின் நிலையத் திட்டம் இரண்டு கட்டங்களாகத் திட்டமிடப்பட்டுள்ளதுடன், இரண்டாம் கட்டம் 2027 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்திற்காக 500 ஏக்கர் பரப்பளவு நிலம் ஒதுக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## மோடியின்...

களில் அரச தரப்பில் பதாகைகள் வைக்கப்பட்டுள்ளன. இந்தக் பதாகைகளில் சிங்களம் மற்றும் ஆங்கில் மொழிகள் மாத்திரமே இடம்பெற்றுள்ளன. இதையடுத்தே அரசாங்கத்தின் மொழிக் கொள்கைக்கு எதிராகக் கடும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் மேலதிகச் செயலாளர் க.மகேசன், யாழ். மாவட்டப் பதில் செயலர் ம.பிரதீபனை யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்று வியாழகிழமை நேரடியாகச் சந்தித்துக் கலந்துரையாடினார். இந்தச் சந்திப்பின்போது தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுச் செயலகத்தினால் நடைமுறைப்படுத்திவரும் திட்டங்களின் முன்னேற்றங்கள் தொடர்பில் அவர் கேட்டறிந்து கொண்டார். (ச-25-66-27)



## கலந்துரையாடல்!

யாழ்ப்பாணம், ஏப்.6

மருதங்கேணியில் இயங்கிவருகின்ற பாதுகாப்பு இல்லம் தொடர்பான கலந்துரையாடல் யாழ்ப்பாண மாவட்ட பதில் செயலர் ம.பிரதீபன் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது. கலந்துரையாடலில் பாதுகாப்பு இல்லத்தில் தங்கியுள்ளவர்களுக்கான உணவு வசதிகள், பாதுகாப்புப் போன்ற விடயங்கள் தொடர்பாகவும், அவற்றுக்கு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன. (ச-41-27-66)






## குருபூசை

யாழ்ப்பாணம், ஏப்.6

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில்,தவத்திரு வே.முருகேசு சுவாமிகளின் குருபூசை தினநிகழ்வு ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் ஆச்சிரம மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் 'குருபூசையின் மகத்துவம்' எனும் தலைப்பில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் ஆசிரியர் துரை கணேசமூர்த்தி ஆன்மீகச் சொற்பொழிவு ஆற்றினார். (ச-25,66)



## உயிர்காப்புச் செயன்முறை விழிப்புணர்வுக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஏப்.6

யாழ். மருத்துவச்சங்கத்தின் ஏற்பாட்டில் உயிர்காக்கும் முதலுதவி, இருதய சுவாசமீளுயிர்ப்புப் பயிற்சி மற்றும் வீதி விபத்து தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு அரியாலை சனசமூக நிலையத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

மயக்கமருந்து நிபுணர் மருத்துவர் எஸ்.பவானியின் நெறிப்படுத்தலில் கருத்தரங்கு முன்னெடுக்கப்பட்டது.

பொது மருத்துவநிபுணரும் யாழ். மருத்துவச்சங்கத்தின் செயலாளருமான மருத்துவர் ஆர்.சிவரஞ்சனி, பயிற்சியை நிறைவுசெய்தவர்களுக்கான சான்றிதழ்களை வழங்கி வைத்தார். (ச-25, 20)



வேலணை பிரதேச செயலக சிறுவர் பாதுகாப்பு அலகின் ஏற்பாட்டில், வேலணை மத்திய கல்லூரியில் தரம் 8 இல் கற்கும் மாணவர்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கு கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

பிரதேச சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் வளவாளராகக் கலந்துகொண்டு சிறுவர் பாதுகாப்பு, சிறுவர்களது உரிமைகள் மற்றும் கடமைகள் தொடர்பாக கருத்துரைகளை வழங்கினார். (ச-25,9)

## ஆசிரிய கலாசாலையில் சிறப்பு ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம், ஏப். 6

உலக சுகாதாரதினத்தை முன்னிட்டு ஆங்கிலநெறி ஆசிரிய மாணவர்களின் ஏற்பாட்டில், சிறப்பு ஒன்றுகூடல் மற்றும் கௌரவிப்பு நிகழ்வுகள் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் ரதிலட்சுமி மண்டபத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றன.

கலாசாலையின் முதல்வர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அமெரிக்க சான்போட் மருத்துவக் கல்லூரியின் உலகப் புகழ்பெற்ற சிறுநீரக மாற்றுச் சத்திரசிகிச்சைப் பேராசிரியரும், மருத்துவ நிபுணருமான தவம் தம்பிப்பிள்ளை பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார். (ச-25,66)



**காணி விற்பனைக்கு**
கந்தர் மடச்சந்திக்கும் Hindu Ladies College க்கும் இடையில் 1 1/4 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
• பிரதான வீதியில் இருந்து 2 ம் காணி
• சுற்றுமதில் • குழாய்க் கிணறு
தரகர் யாரும் தொடர்புகொள்ளவேண்டாம்.
077 225 5805
(காணி உரிமையாளர்)

**பணியாளர்கள் தேவை**
மந்திகையில் இயங்கும் விற்பனை நிலையத்திற்கு பணியாளர்கள் தேவை
தொடர்புகளுக்கு :
0756419450

**கடைகள் வாடகைக்கு**
இடம் : சாவகச்சேரி சந்தைக்கு அருகாமையில் 40 அடி நீளம் 30 அடி அகலம் கொண்ட 2 கடைகள் குளியலறை மற்றும் தங்குமிட வசதிகள், வாகனத்தரிப்பிட வசதிகள் உண்டு.
தொடர்புகளுக்கு :
0756419450

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கார் விற்பனைக்கு

HONDA FIT GP-5 Hybrid (S Grade) Fully Loaded) 2015 Model Black Colour Automatic Superb Condition யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- 071 207 1341

## வீடுகள் வாடகைக்கு

மந்திகை வைத்தியசாலையில் இருந்து 500m தூரத்தில் பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள வீடுகள் வாடகைக்கு உண்டு. தொழில் புரிவோர் விரும்பத்தக்கது.

076 464 4565

## பற்பசைக்குள் போதைப்பொருள் வவு. சிறையில் இருவர் கைது!

பற்பசையினுள் போதைப்பொருளை மறைத்துவைத்து வவுனியா சிறைச்சாலைக்கு எடுத்துச் சென்ற இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆண் ஒருவரும், பெண் ஒருவருமே சிறைச்சாலை உத்தியோகத்தர்களால் கைது செய்யப்பட்டு, தம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் கூறியுள்ளனர்.

மேலதிக விசாரணைகளின் பின் அவர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-18)

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பஸ்தரிப்பு நிலையத்திலிருந்து 2.5 கிலோமீற்றர் தூரத்திலும், பல்கலைக்கழக வளாகத்திலிருந்து 500 மீற்றர் தூரத்திலும் 2 1/4 பரப்பு காணியில் 4 அறைகள், வரவேற்பறை, சமையலறை, 2 குளியலறை, விறாந்தை தனிக்கிணறு என 2000 சதுர அடியில் அமைந்த பெரிய வீடு பாவனைக்கு ஏற்ற வகையில் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-

Whats app:-

+61 421 290 240

(CS/57926) J-1

## புகையிலை விற்பனைக்கு

அறுவடைக்குத் தயாராக உள்ள பாணிப்புகையிலை (தோட்டு வெட்டு) 6500 கன்றுகள் விற்பனைக்கு.

தொடர்பு:- 076 287 8157

## VACANCIES - Jaffna / Mullaitivu

1. Management Assistant - A/L படித்த
2. Technician - O/L or A/L

Contact:077 344 4801, ssripvt@gmail.com

## தேவை

சூரிய மின்சார இணைப்பின் (Solar Power) 100 Kwக்கு மேற்பட்ட அனுமதிப்பத்திரத்தை வட பகுதியில் காணியுடன் விற்க ஆர்வமாக உள்ளவர்கள் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு:- 077 082 1010

(CS57919) N-1

## மணமகள் தேவை

யாழ். இந்து (V) 1993 இல் பிறந்த சிவில் என்ஜினியர் கனடாவில் வசிக்கும் மணமகனுக்கு யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த பட்டதாரி மணமகள் தேவை.

077 775 9187

(CS/57911) J-1

## டொச் மொழி வகுப்புக்கள்

பிரபல ஆசிரியர் திரு R.மயூரன் அவர்களின் ஜேர்மன் மொழி (Deutsch) வகுப்புக்கள் ஒவ்வொரு வாரமும் ஆரம்பமாகின்றன. தொடர்புகொண்ட பின் நேரில் வரவும்.

**IELTS Life Skill A1 மற்றும் Spoken English Spoken Sinhala Classes.**

German Swiss Academy
No: 51A, Kasthuriyar Road, Jaffna. And Kodikamam Road Nelliady
(Near Bus Stand)

T.P: 077 645 4998, 021 799 0946

(CS/57875) J-1

## தொழில் தொடங்கும், இளைஞர்களுக்கு ஒரு வரப்பிரசாதம்

சங்கரத்தை முருகமூர்த்தி கோவிலுக்கு அண்மையில் உள்ள ரட்ணசிங்கம் மணிமண்டபத்தை தொழில் தொடங்கும் இளைஞர்களுக்கு வரப்பிரசாதமாக வழங்கவுள்ளோம்.

★ திருமண வைபவங்கள், பூப்புனித நீராட்டு விழாக்கள்
★ பிறந்தநாள் கொண்டாட்டங்கள் போன்றவற்றை நடத்தலாம்

**அல்லது**

★ தனியார் அலுவலகமாகவோ சிறிய தொழிற்சாலையாக பயன்படுத்தவும் முடியும்.

**குறிப்பிட்ட காலத்திற்கு வாடகை இலவசம்**

★ 3 பேஸ் மின்சாரம், இரண்டு அலுவலகம், மலசலகூடவசதி, வாகனத்தரிப்பிடம் மேலும் பல வசதிகளுடன்

மேலதிக தொடர்புகளுக்கு:

076 017 1951, 0044 795 6377 627 (Whatapp)
077 662 5516

(cs 57858) (N-1)

## SPOKEN ENGLISH & GRAMMAR

GCE O/L எழுதிய மாணவர்களுக்கு **Speaking, Writing, Reading** பயிற்சிகள் **English Medium Students** உட்பட சகலருக்கும் கொழும்பில் பலவருடம் கற்பித்த அனுபவ ஆசிரியர் : **K. Ganesh BA**

யாழ் நாவலர், அன்னசத்திர வீதி

077 766 8725

## வீடு வாடகைக்கு தேவை

மானிப்பாய், கொக்குவில், தாவடி ஆகிய பகுதிகளில் 1 1/2 மாத காலப்பகுதிக்கு வீடு வாடகைக்கு தேவை.

077 308 7172

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் உரும்பிராய் பகுதியில் 6 பரப்பு காணி விற்பனைக்குண்டு**

**நிலப்பரப்பு**

- பலாலி வீதியில் இருந்து 150 மீற்றர் தூரம்
- 20 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது
- உரும்பிராய் பெற்றோல் செற் முன் வீதியில் உள்ளது
- பயன் தரும் தென்னைகள் உள்ளன
- நல்ல சுற்று சூழல் குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
- ஒரு பரப்பின் விலை 64 லட்சம்
- தரகர் தேவையில்லை
- பார்வையிடும் நேரம்: காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

தொடர்புகளுக்கு: ஜெயம்

077 814 7389
077 986 5457

(CS/2893) J-1

## விற்பனையாளர் தேவை

மானிப்பாயில் இயங்கிவரும் பிரபல வாகன உதிரிப்பாக விற்பனை நிலையமொன்றிற்கு விற்பனையாளர் (Sale man) தேவை.

076 641 3727

(CS/57923) J-1

## வேலையாட்கள் தேவை

தென் மாகாணத்தில் அமைந்துள்ள பலசரக்கு கடையொன்றில் தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய 50 வயதிற்கு மேற்பட்ட ஆண் வேலையாட்கள் தேவை.

- பில் கணக்கு எழுதக்கூடியவர்கள் விரும்பத்தக்கது
- காசாளர்
- சமைக்கக்கூடியவர்கள் (மதிய உணவு) விரும்பத்தக்கது. சம்பளம் :- 60.000/-

தொடர்பு:- 077 480 3379

(CS/57921) J-1

## வாகன ஓட்டுனர் (Driver) தேவை

மானிப்பாயில் இயங்கிவரும் பிரபல வாகன உதிரிப்பாக விற்பனை நிலையமொன்றிற்கு வாகன ஓட்டுனர் (Driver) தேவை.

தொடர்பு:- 076 641 3727

(CS/57922) J-1

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் வடமராட்சி அல்வாய் கிழக்கில் 32 பரப்பு (நிலப்பரப்பு) விற்பனைக்கு உண்டு**

- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் இருவழி பாதையுடன்
- 1 பரப்பின் விலை
  - ✓ பிரதான வீதி முகப்புடன் பதினேழு லட்சம் ரூபா (17,000,00)
  - ✓ இரண்டாம் காணி பதினைந்து லட்சம் ரூபா (15,000,00)
  - ✓ பின் பகுதி காணி எட்டு லட்சம் ரூபா (8,000,00)
- நெல்லியடி பஸ்நிலையம் 2 1/2 KM, பருத்தித்துறை பஸ் நிலையம் 2 KM, மந்திகை ஆஸ்பத்திரி 1 KM பருத்தித்துறை வீதி 600M, மாலு சந்தி 1 KM தூரம்
- தம்பசெட்டி மெதடிஸ்த மிசன் வித்தியாலயம் 1 KM தூரம், மாலுசந்தி பிள்ளையார் கோயில் 1 KM தூரம்
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி, செம்மண் தரை நன்னீர் ஊற்று
- தரகர் தேவையில்லை

**(பார்வையிடும் நேரம் காலை 8.00 - மாலை 6.00 வரை)**

தொடர்பு: 076 860 2770, 076 987 8617, 076 935 3971

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி: news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் [illegible] வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.04.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 08

# சஞ்சீவி

Registered as a Newspaper

தாழாத் தளராத் தலைநடுங்காத் தண்டூன்றா
வீழா இறக்கும் இவள்மாட்டும் – காழ்இலா
மம்மர்கொள் மாந்தர்க் கணங்காகும் தன்கைக்கோல்
அம்மனைக்கோல் ஆகிய ஞான்று.'

– நாலடியார்

மலை : 34 வள்ளுவர் ஆண்டு : 2055 பங்குனி 23 ஞாயிற்றுக்கிழமை (06.04.2025) சிகரம் :139

# வாய் திறப்பார்களா?



ந. பரமேஸ்வரன்



தற்போது பட்டலந்த ஆணைக்குழு அறிக்கை பற்றி நாடாளுமன்றத்தில் காரசாரமாக விவாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால் தமிழ்த் தேசியக் கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த அறிக்கையைப்பற்றி பெரிதாக அலட்டிக்கொள்ளவில்லை. "நாங்களும் இருக்கிறோம்" என்பதுபோல் எழுந்தமானமாகவே சில கருத்துக்களை அவர்கள் தெரிவித்து வருகின்றனர். பட்டலந்த ஆணைக்குழு அறிக்கை பற்றி சூடான வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்று வரும் நிலையில் 1948 ஆம் ஆண்டு முதல் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் தொடர்பான அறிக்கைகளை தமிழ்த் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏன் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கக்கூடாது?

தமிழ்த் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் தொடர்பான அறிக்கைகள் பற்றித் தெரியாவிட்டால் தெரிந்து கொள்வதற்காக அவற்றை இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறேன், அவசரகாலநிலை 58-(Emergency 58) இது 1958 ஆம் ஆண்டு தமிழர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட வன்முறைகளைப்பற்றி விலாவாரியாக எடுத்துக்கூறும் ஆவணம். ஒப்சேர்வர் பத்திரிகை ஆசிரியர் தார்சி வித்தாச்சியால் எழுதப்பட்டது. இந்த நூலை வெளியிட்டமைக்காக அப்போதைய பிரதமர் பண்டாரநாயக்க, தார்சி வித்தாச்சியை நாடுகடத்தியிருந்தார்.

அடுத்தது சன்சோனி ஆணைக்குழு அறிக்கை . 1977 ஆம் ஆண்டு தமிழர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட வன்முறைகளைப்பற்றி விசாரணை செய்வதாக சர்வதேசத்தை ஏமாற்றும் நோக்குடன் பிரதம நீதியரசர் சன்சோனி தலைமையில் ஜே. ஆர். நியமித்த ஆணைக்குழு. நீதியரசர் சன்சோனி பறங்கியராக இருந்தமையால் நேர்மையான முறையில் விசாரணைகளை மேற்கொண்டு பக்கச்சார்பின்றி தனது அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மற்றையது லயனல் பெர்னாண்டோ அறிக்கை, 1981 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற யாழ்ப்பாண நூலக எரிப்புத் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கென அரசாங்க அதிபர் லயனல் பெர்னாண்டோ தலைமையில் நியமிக்கப்பட்ட விசாரணைக்குழுவின் அறிக்கை.

மற்ற்றையது தருஸ்மான் அறிக்கை என சிங்கள அரசியல்வாதிகளால் கேலியாக அழைக்கப்படும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை. இவை எல்லாவற்றையும் விட முக்கியமானது சிங்களவர்களின் யுத்த வெற்றி நாயகன் மஹிந்தவால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை. இவற்றுடன் யஸ்மின் சூகாவின் 'முடிவுறாத யுத்தம்', சர்வதேச மன்னிப்புச்சபை, மனித உரிமைகள் கண்காணிப்பகம் போன்றவற்றின் அறிக்கைகளும் உள்ளன.

ஒரு காலத்தில் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளாக இருந்த தமிழரசுக்கட்சியோ அல்லது தூய தமிழ்த்தேசியம் பேசும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியோ ஏன் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதிகள் தொடர்பாக ஏற்கனவே முன்னெடுக்கப்பட்ட விசாரணை அறிக்கைகளை தூசு தட்டுமாறு கோரிக்கைவிடக்கூடாது? ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அறிக்கையையே நிராகரிக்கும் இலங்கை அரசு எவ்வாறு ஏனைய அறிக்கைகளை கருத்தில் எடுக்கும் எனச் சிலர் கேட்கக்கூடும். ஆனால் கேட்பதால் என்ன குறைந்துவிடப்போகிறது? ஊடகங்களில் செய்தி வரும், ஹன்சார்ட்டில் பிரசுரமாகும், தமிழ் மக்கள் புளுகப்படுவார்கள்.

அறிக்கைகளைப் பற்றிப் பேசாவிட்டாலும் அரச பயங்கரவாதத்தால் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகள் பற்றியாவது வாய் திறந்தால் எம்மவர்களும் நாடாளுமன்றத்தில் இருக்கிறார்கள் என தமிழ் மக்கள் கொஞ்சமேனும் பெருமைப்படுவார்கள்.

தமிழ் மக்களின் பிரதிநிதிகளுக்கு தெரியாவிட்டால் அரச பயங்கரவாதத்தால் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகள் சிலவற்றையும் இங்கு பட்டியலிட்டுக்காட்டலாம். வெலிக்கடைப் படுகொலைகள், ஒதியமலைப் படுகொலைகள், (முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் மகன் ரவி ஜெயவர்த்தனாவின் ஆசியுடன் இடம்பெற்ற படுகொலைகள்) செட்டிகுளம் படுகொலைகள், கொக்கட்டிச்சோலை படுகொலை, வீரமுனைப் படுகொலை, சத்துருக்கொண்டான் படுகொலை, வந்தாறுமூலை படுகொலை, வல்வைப் படுகொலை, இறுதிப் போர்ப்படுகொலை.

**அறிக்கைகளைப் பற்றிப் பேசாவிட்டாலும் அரச பயங்கரவாதத்தால் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகள் பற்றியாவது வாய் திறந்தால் எம்மவர்களும் நாடாளுமன்றத்தில் இருக்கிறார்கள் எனத் தமிழ் மக்கள் கொஞ்சமேனும் பெருமைப்படுவார்கள்.**



இங்கு நூற்றுக்கு மேற்பட்ட தமிழர்கள் திட்டமிட்ட வகையில் கொல்லப்பட்ட விவரங்களையே சுட்டிக் காட்டியுள்ளேன். இவையாவும் அரச பயங்கரவாதத்தால் திட்டமிட்டவகையில் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகள் இவர்கள் அனைவரும் குண்டுவீச்சிலோ. விமானத் தாக்குதலிலோ கொல்லப்படவில்லை. சுட்டும் வெட்டியும் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டும் கொல்லப்பட்டவர்கள்.

தமிழ் ஊடகங்களுக்காகவேனும் வாயைத் திறப்பார்களாக எங்கள் எம்.பி.க்கள்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரித்தானியாவின் தடை உணர்த்துவது என்ன?

நிலாந்தன்

இலங்கையில் போர்க்காலத்தில் இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்களுக்கு எதிராக அதில் சம்பந்தப்பட்ட நான்கு பேருக்குத் தடைவிதித்திருக்கிறது பிரித்தானியா. இதுவரை காலமும் கனடா அமெரிக்கா ஆகிய நாடுகள் இவ்வாறு தடை விதித்திருக்கின்றன. பிரித்தானியா இவ்வாறு தடை விதித்திருப்பது இதுதான் முதற்தடவை.



முதலில் இந்தத் தடை வெளிவந்திருக்கும் பின்னணியைப் பார்க்கலாம். 58 ஆவது ஜெனிவாக் கூட்டத்தொடர் இன்று முடிவடைகிறது. அந்தக்கூட்டத் தொடர் நடந்துகொண்டிருந்த காலகட்டத்திலேயே பிரித்தானியாவின் தடை அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே இரு கிழமைகளுக்கு முன்பு ஜெனிவாக் கூட்டத்தொடரின் பின்னணியில், அல் ஜெஸீராவின் "ஹெட் டு ஹெட்" நிகழ்ச்சி ஒளிபரப்பப்பட்டது. அந்த நிகழ்ச்சியும் இப்பொழுது வெளிவந்திருக்கும் பிரித்தானியாவின் தடையும் ஏறக்குறைய ஒரே நோக்கத்தைக் கொண்டவை. சீன இடதுசாரி மரபில் வந்த ஜே.வி.பி.யை அடித்தளமாகக் கொண்ட தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு இரண்டு வரையறைகளை உணர்த்துவதே இந்தத் தடை மற்றும் அல் ஜெஸீராவின் நேர்காணல் இரண்டினதும் நோக்கம் எனலாம். முதலாவது வரையறை இந்த அரசாங்கம் சீனாவை நோக்கிச் சாய்வதில் உள்ள வரையறை. இரண்டாவது இனப்பிரச்சினை தொடர்பில் பொறுப்புக்கூறாமல் தப்புவதில் உள்ள வரையறை. இதை இன்னும் அறுத்துறுத்துச் சொன்னால், பொறுப்புக்கூறல் என்ற கவர்ச்சியான தலைப்பின் கீழ் இலங்கை அரசாங்கத்தை தமது செல்வாக்கு மண்டலத்துக்குள் வைத்திருப்பதற்கான அழுத்தங்கள். பிரித்தானியாவின் தடை நான்கு பேர்களுக்கு விதிக்கப்பட்டிருக்கிறது. இவர்களில் மூவர் தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தத்தை முன்னெடுத்த அரச படைப்பிரதானிகள். ஒருவர் தமிழ்த் தரப்பில் தளபதியாகவிருந்து பின்னர் அரசதரப்புடன் இணைந்த கருணா. இந்த நால்வரும் இலங்கைத்தீவின் சிவில் யுத்தத்தில் செய்த குற்றங்களுக்கு எதிராகவே மேற்படி தடை விதிக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பாக பிரித்தானிய அரசின் வெளிவிவகார, பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி அலுவலகத்தின் உத்தியோகபூர்வ அறிக்கையில், கருணாவுக்கு எதிரான குற்றச்சாட்டுகளில் அவர் விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இருந்த காலமும் பின்னர் அரசதரப்போடு இணைந்து செயற்பட்ட காலமும் உள்ளிட்ட சிவில் யுத்த காலகட்டத்தில் செய்த குற்றங்கள் என்றுதான் கூறப்பட்டுள்ளது. மேலும் அந்த உத்தியோகபூர்வ குறிப்பில் கருணா தொடர்பாகக் கூறப்படுகையில் "பயங்கரவாதக் குழுவான விடுதலைப் புலிகள் இயக்கம்" என்ற சொற்பிரயோகம் உண்டு.

நாலாம் கட்ட ஈழப்போரில் கருணா அரசதரப்புடன் இணைந்து செயற்பட்டதை வைத்து இந்தத்தடை அரசு படைப்பிரதானிகளுக்கும் அரசாங்கத்தோடு இணைந்து செயற்பட்ட கருணாவுக்கும் எதிரானது என்றுதான் ஒரு பொதுவான தமிழ் விளக்கம் காணப்படுகின்றது. ஆனால் அது முழு உண்மையல்ல. இந்தத் தடைக்குள் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு எதிரான குற்றச்சாட்டுகளும் உள்ளன. ஏற்கனவே ஐ.நா.வின் அறிக்கைகளில் "போரில் ஈடுபட்ட இரண்டு தரப்புகளுக்கும்" எதிராக என்று குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன என்பதையும் இங்கு தொகுத்துக் கவனிக்கவேண்டும்.

அதுமட்டுமல்ல மேற்படி குற்றச்சாட்டுகள் தொடர்பாக பயன்படுத்தப்பட்ட வார்த்தைகளிலும் "மனித உரிமை மீறல்கள், மனித உரிமைத் துஷ்பிரயோகங்கள்" போன்ற வார்த்தைகள்தான் காணப்படுகின்றன. இன அழிப்பு என்ற வார்த்தை இல்லை. அதாவது பிரித்தானியாவின் தடையானது நடந்தது இனஅழிப்பு என்பதனை உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொள்ளவில்லை. கடந்த 15ஆண்டுகளாக ஐ.நா.வின் அறிக்கைகளிலும் அதுதான் காணப்படுகின்றது. அங்கேயும் தமிழர்களுக்கு எதிராக இடம்பெற்றவை இனஅழிப்பு என்று உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

இதில் ஒப்பீட்டளவில் கனடாவில் நிறைவேற்றப்பட்ட இரு தீர்மானங்கள் இன அழிப்பு என்பதனை ஏற்றுக்கொள்கின்றன. தீர்மானங்களில் இன அழிப்பு என்ற வார்த்தை பயன்படுத்தப்படுகிறது. ஆனால் அது கனடாவின் இலங்கை தொடர்பான வெளியுறவு அணுகுமுறைகளில் வெளியுறவுக் கொள்கைத் தீர்மானமாக எடுக்கப்படவில்லை. அதாவது ஒரு ராஜதந்திர முடிவாக அது நடைமுறையில் இல்லை.

எனவே கடந்த 15 ஆண்டுகளாக மேற்கத்திய நாடுகளும் ஐ.நா.வும் இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக எடுக்கும் உத்தியோகபூர்வ நிலைப்பாடுகளைத் தொகுத்துப் பார்த்தால் அங்கே ஒரு பொதுத்தன்மையைத் தமிழர்கள் கண்டுபிடிக்கலாம். அது என்னவென்றால் இலங்கைத் தீவில் இடம்பெற்றது இன அழிப்பு என்பதனை உத்தியோகபூர்வ வெளியுறவுக் கொள்கை நிலைப்பாடாக மேற்கு நாடுகள் இதுவரை எடுக்கவில்லை. ஐ.நா.வும் அது இனப்படுகொலை என்பதனை உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொள்ளவில்லை. இது முதலாவது. இரண்டாவது, கடந்த 15 ஆண்டுகளாக விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கு எதிரான தடைகளை எல்லா நாடுகளும் தொடர்ந்து பேணுகின்றன. தாயகத்தில் செயற்படாத ஒரு அமைப்புக்கு எதிராகத் தடையைத் தொடர்ந்து பேணுவதன் மூலம் அவர்கள் தமிழ் மக்களுக்கு உணர்த்த முற்படும் வரையறைகள் எவை?

மூன்றாவது, ஐ.நா.வில் இலங்கை இனப்பிரச்சினையானது வரையறுக்கப்பட்ட ஆணையைக் கொண்ட ஐ.நா.வின் உறுப்பாகிய மனித உரிமைகள் பேரவைக்குள்தான் பெட்டி கட்டப்பட்டிருக்கிறது. மனித உரிமைகள் பேரவையானது ஐ.நா.வின் 8 உறுப்புகளில் ஒன்று. பாதுகாப்புச் சபை, பொதுச் சபை போன்று அதிகாரம்மிக்கதல்ல. ஒரு நாட்டுக்கு எதிராக படையினரை அனுப்புவதற்கோ அல்லது பொருளாதாரத் தடைகளை விதிப்பதற்கோ தேவையான ஆணை மனித உரிமைகள் பேரவைக்குக் கிடையாது. சம்பந்தப்பட்ட நாட்டின் அரசாங்கம் ஏற்றுக்கொண்டால் மட்டுமே மனித உரிமைகள் பேரவை அந்த நாட்டில் இறங்கி வேலைசெய்யலாம்.

குறிப்பாக 2021 ஆம் ஆண்டிலிருந்து ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்குள் ஓர் அலுவலகம் இயங்கிவருகிறது. இலங்கைத்தீவின் போர்க்களத்தில் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்களுக்கு எதிரான சான்றுகளையும் சாட்சிகளையும் சேகரிப்பதற்கான ஓர் அலுவலகம் அது. அப்படி ஒரு பொறிமுறை வேண்டும் என்று 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தமிழ்த்தேசியக் கட்சிகள் கூட்டாக ஒரு கடிதத்தை எழுதின. அந்தப் பொறிமுறையானது மனித உரிமைகள் பேரவைக்கு வெளியே பொறுப்புக்கூறலைக் கொண்டுபோகவேண்டும் என்பது கடிதத்தின் சாராம்சம் ஆகும். மேலும் அந்தப் பொறிமுறைக்கு ஒரு காலவரையறை உருவாக்கப்படவேண்டும் என்றும் அந்தக் கூட்டுக்கடிதத்தில் கேட்கப்பட்டிருந்தது. ஆனால் இந்தக் கோரிக்கைகளில் பெரும்பாலானவை ஐ.நா.வால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. 2021ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட அந்தப் பொறிமுறையானது ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு உட்பட்ட ஓர் அலுவலகமாகத்தான் உருவாக்கப்பட்டது. அதாவது பலவீனமான ஆணையைக் கொண்டது. இதுதான் ஐ.நா.வில் தமிழ் மக்களுக்குக் கிடைக்கக்கூடியவற்றின் வரையறை. இவ்வாறு கடந்த 15 ஆண்டு காலமாக மேற்கை மையமாகக் கொண்ட, அல்லது ஐ.நா.வை மையமாகக் கொண்ட நீதிக்கான தமிழ் மக்களின் போராட்டத்தின் விளைவுகளைத் தொகுத்துப் பார்த்தால் பின்வரும் சித்திரம் கிடைக்கும்.

மேற்கு நாடுகள் இலங்கை அரசாங்கத்தின் மீது அழுத்தத்தைப் பிரயோகிக்கும் அதேசமயம் நீதிக்கான தமிழ் மக்களின் கோரிக்கைகளை முழுமையாக ஏற்றுக்கொள்ளவில்லை. அதோடு தமிழ் மக்களுக்கு அனைத்துலக அளவில் இருக்கக் கூடிய ராஜதந்திர வாய்ப்புகளின் வரையறைகளையும் அவை உணர்த்துபவைகளாகக் காணப்படுகின்றன.

எனினும் 15 ஆண்டுகளின் பின்னரும் நீதிக்கான தமிழ் மக்களின் போராட்ட வழியில் தமிழ் மக்கள் மெதுமெதுவாக முன்னேறி வருகிறார்கள் என்பதனை பிரித்தானியாவின் தடை உணர்த்துகின்றது. குறிப்பாக நீதிக்கான தமிழ் மக்களின் போராட்டத்தில் புலம்பெயர்ந்த தமிழர்கள் பெற்ற ஆகப்பிந்திய வெற்றியாகவும் அதைக் கூறலாம். அண்மையில் கனேடிய உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பும் அத்தகையதே. கனடாவில் நிறைவேற்றப்பட்ட இனஅழிப்பு அறிவூட்டல் தீர்மானத்திற்கு எதிரான வழக்கில், கனேடிய உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு தமிழ் மக்களுக்கு உற்சாகமூட்டுவது. இவையாவும் வரையறைக்குட்பட்ட வெற்றிகள்தான். நீதிக்கான போராட்டத்தில் தமிழ் மக்கள் மேலும் நீண்டதூரம் பயணிக்க வேண்டியுள்ளது. கனடா, அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகள் விதித்திருக்கும் தடைகளும் குறிப்பாக கனடாவில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானங்களும் நீதிக்கான தமிழ் மக்களின் போராட்டத்துக்கு உற்சாகமூட்டுபவை. அதேசமயம் மேற்கு நாடுகளின் மேற்படி நகர்வுகள் யாவும் அந்தந்த நாடுகளின் பூகோள இராணுவ அரசியல் பொருளாதார நலன்களின் அடிப்படையில் எடுக்கப்பட்ட முடிவுகள் தான் என்பதையும் தமிழர்கள் விளங்கிக்கொள்ளவேண்டும். அதை அவர்கள் தமிழ் மக்களின் பெயரால் "பொறுப்புக்கூறல்" என்ற தலைப்பின் கீழ் ராஜதந்திரமாக முன்னெடுக்கின்றார்கள்.

இந்த விடயத்தில் மேற்கு நாடுகள் மட்டுமல்ல இந்தியா, சீனா முதலாக உலகில் எந்த ஓர் அரசுக்கட்டமைப்பும் இலங்கைத் தமிழர்களின் விடயத்தில் அவ்வாறுதான் முடிவுகளை எடுக்கும். அரசுகள் எப்பொழுதும் தங்களுடைய இராணுவப் பொருளாதார அரசியல் நோக்குநிலைகளில் இருந்துதான் முடிவுகளை எடுக்கும். ஏன் கடவுளுக்கு ஓர் அரசிருந்து அங்கு முடிவு எடுக்கப்பட்டாலும் அப்படித்தான் அமையும்.

இதில் தமிழர்கள்தான் தங்களுடைய நலன்களும் வெளி அரசுகளின் நலன்களும் இடை வெட்டும் ஒரு பொதுப்புள்ளியைக் கண்டுபிடித்து அங்கிருந்து தொடங்கி தமக்குக் கிடைத்திருக்கும் ராஜதந்திர வாய்ப்புகளை எப்படி முழு வெற்றியாக மாற்றுவது என்று திட்டமிட்டுச் செயற்படவேண்டும். அதாவது தமிழ் மக்கள் உலக அளவில் தங்களுக்குள்ள வரையறைகளையும் வாய்ப்புகளையும் நன்கு விளங்கி வைத்திருக்கவேண்டும். கிடைத்திருக்கும் வாய்ப்புகளைப் பயன்படுத்தி வரையறைகளை எப்படிக் கடப்பது அல்லது உடைப்பது என்று திட்டமிட்டுச் செயற்படவேண்டும்.

கடந்த 15 ஆண்டுகளாக நிறைவேற்றப்பட்ட தடைகளும் தீர்மானங்களும் நீதிக்கான தமிழ் மக்களின் போராட்டத்துக்கு கிடைத்த உற்சாகமூட்டும் வெற்றிகளாகும். தமிழ் மக்கள் யாருக்கு எதிராக நீதியைக் கேட்டு போராடுகிறார்களோ அவர்கள் அங்கு தண்டிக்கப்படுகிறார்கள். மேற்கு நாடுகளின் தடைகள் ஒருவிதத்தில் தமிழ் மக்களுக்கும் வரையறைகளை உணர்த்துபவைதான். என்றாலும் சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்புக்கு எதிராக அதன் தலைக்கு மேல் தொங்கிக் கொண்டிருக்கும் கத்திகளாக அவை காணப்படுகின்றன. இந்த விடயத்தில் மேற்கு நாடுகள் தங்களோடு முழுமையாக இல்லை என்று கருதி தமிழ் மக்கள் அவற்றுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுக்கத் தேவையில்லை. தடைகள் விடயத்தில் மேற்கும் ஐ.நா.வும் அரைவாசி அளவுக்கு தமிழ் மக்களுக்குச் சாதகமாக நிற்கின்றன. எனவே தமக்கு கிடைத்திருக்கும் பாதியளவு சாதகமான ராஜதந்திர வாய்ப்புகளை முழு அளவு சாதகமானவைகளாக எப்படி மாற்றுவது என்றுதான் தமிழ்த் தரப்பு சிந்திக்கவேண்டும்.

வெளியரசுகள் அவற்றின் நலன்சார்ந்து எடுக்கும் நகர்வுகளை எப்படி ஈழத் தமிழர்கள் தமது நலன் சார்ந்து வெற்றிகரமாகக் கையாளலாம் என்று சிந்திக்க வேண்டும். இதைத் தொகுத்துச் சொன்னால் தமிழ் மக்கள் ஓர் அரசு போல சிந்திக்கவேண்டும். ஒரு அரசு இன்னொரு அரசோடு கொள்ளும் உறவுகளில் இரண்டு தரப்புக்கும் பொதுவான நலன்கள் ஒன்றை ஒன்று வெட்டும் புள்ளியில்தான் உறவுகள் விருத்தி அடைகின்றன. எனவே ஈழத்தமிழர்கள் ஓர் அரசு போல சிந்தித்து முடிவெடுக்க வேண்டும். ராஜதந்திரத்தில் நலன்கள்தான் முக்கியம். அறம்; தர்மம்; நீதி போன்றவை அங்கே கிடையாது. தொப்புள்கொடி உறவு; இதயமும் இதயமும் கலக்கும் உறவு என்பவையெல்லாம் கிடையாது. நலன்களும் நலன்களும் இடைவெட்டும் புள்ளிகளைத் தீர்க்க தரிசனமாகக் கையாள்வதுதான் ராஜதந்திரம். எனவே ஓர் அரசுபோல சிந்தித்து ஈழத்தமிழர்கள் முடிவெடுக்கவேண்டும். பிரித்தானியாவின் தடை தமிழ்மக்களுக்கு அண்மையில் கிடைத்திருக்கும் ஒரு வெற்றி. அந்த வெற்றி முழுமையானது இல்லை. அதை எப்படி ஒரு முழுமையான ராஜதந்திர வெற்றியாக மாற்றுவது என்பது ஈழத்தமிழர்கள் ஓர் அரசுபோல சிந்தித்து முடிவெடுப்பதில்தான் தங்கியிருக்கின்றது. ஆனால் ஓர் அரசு போல் சிந்திப்பதென்றால் அதற்கு முதலில் தமிழ் மக்கள் ஒரு தேசமாகத் திரளவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க வரியும்

## இந்திய - இலங்கை வர்த்தகமும்




○ அ.நிக்ஸன்

இலங்கை உட்பட பல நாடுகள் மீது அமெரிக்கா விதித்திருக்கும் வரி உலக வர்த்தகப் போருக்குக் காரண - காரியமாக அமையும் என்று பரவலாகக் கூறப்பட்டா லும், ஐரோப்பிய நாடுகள் மற்றும் தெற்காசிய நாடுகளின் வர்த்தகப் பலவீனங்களையே இந்த வரி எடுத்துக்காண்பிக்கிறது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் விதித்துள்ள இந்த வரி தெற்காசியாவை மையப்படுத்திய பிறிக்ஸ் பொருளாதாரக் கட்டமைப்பை வலுப்படுத்தும் எனக் கூறப்பட்டாலும், இந்திய - சீன முரண்பாடுகள் அதற்குச் சாத்தியமானதாக அமையக் கூடிய வாய்ப்புகள் இருப்பதாகத் தெரியவில்லை. இதனாலேயே பிறிக்ஸ் நாடுகளுக்கிடையிலான பொதுநாணயத்தை உருவாக்குவது பற்றிய பேச்சுகள் வெற்றிபெறவில்லை.

ஐரோப்பிய நாடுகள் வளர்ச்சியடைந்தவை. அத்துடன் ஒற்றுமையாகச் செயற்படும் நாடுகள். இதனால் அமெரிக்க டொலருக்கு எதிரான யூரோ நாணயம் வெற்றிபெற்றது. ஆனால் பிறிக்ஸில் அங்கம் வகிக்கும் நாடுகள் மத்தியில் அவ்வாறான ஒற்றுமை ஒல்லை. இந்தநிலையில், சென்ற வியாழக்கிழமை நடைபெற்ற 'பிறிக்ஸ் பிரேசில் 2025' என்ற இணையவழி பேட்டியில் பிரேசில் நிதி அமைச்சின் சர்வதேச விவகாரங்களுக்கான செயலாளர் டாட்டியான ரோசிட்டோ, பிறிக்ஸ் நாடுகளுக்கு இடையே தேசிய நாணயங்களைப் பயன்படுத்தும் யோசனையை முன்வைத்துள்ளார். பிரேசிலின் பொருளாதார அமைச்சு அதற்கான திட்டங்களைத் தயாரிக்கவுள்ளதாகவும் அவர் உறுதியளித்துள்ளார்.

பிறிக்ஸ் நாடுகளுக்கிடையே வர்த்தகம் செய்யும்போது அமெரிக்க டொலரின் பயன்பாட்டைக் குறைக்கும் முயற்சிக்குப் பிரேசில் ஆதரவளிக்கும் என்று கூறியிருக்கிறார். இதனை ரஷ்ய ஊடகமான டாஸ் (TASS) வெளியிட்டுள்ளது. அமெரிக்காவின் வரி அறிவிப்புக்கு மத்தியில், தேசிய நாணயங்களைப் பயன்படுத்துவது பற்றிபேசியிருப்பதுடொனால்ட் ட்ரம்ப்புக்குச் சவாலாக இருக்கும் என்றும், தேசிய நாணயம் மட்டுமல்லாது, சர்வதேச நாணயநிதியம் (IMF) மற்றும் உலக வங்கிக்கு மாற்றாக, "புதிய வளர்ச்சி வங்கி" (New Development Bank NDB) என்ற வங்கி ஒன்றை உருவாக்கவும் பிறிக்ஸ் நாடுகள் தீவிரமாக முயன்று வருவதாக இந்திய ஊடகங்களும் செய்தி வெளியிட்டிருக்கின்றன.

இந்தப்பின்னணியிலேதான் தேசிய நாணயத்தில் வர்த்தகத்தைத் தொடங்குவது பற்றி பிறிக்ஸ் நாடுகள் ஏற்கனவே பேசி வந்த நிலையில், இதற்கான சரியான தருணம் இதுதான் என்று டாட்டியானா ரோசிட்டோ கூறியிருக்கிறார். அநேகமாக இந்த ஆண்டு நடைபெறவுள்ள பிறிக்ஸ் மாநாட்டில் இது தொடர்பாகப் பரிசீலிக்கப்படும் என ரஷ்ய ஊடகங்கள் கூறுகின்றன.

ஆனால் பிறிக்ஸ் பொருளாதாரக் கட்டமைப்புக்கான 'பொது நாணயம்' பற்றிய பேச்சுகள் எழுந்த 2020 இல் இந்தியா அமைதிகாத்தது. அதுமாத்திரமல்ல பிறிக்ஸ் நாணயம் சாத்தியப்படக்கூடியதல்ல என்று இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் அமெரிக்காவிடம் உறுதியாகக் கூறியிருந்தார். இப்பின்புலத்தில் இந்திய வர்த்தகச் செயற்பாடுகளில் தம்முடன் இணைந் திருக்கும் என்று நியுயோர்க் ரைம்ஸ் செய்தி அப்போது வெளியிட்டிருந்தது. கடந்த ஆண்டு அமெரிக்காவுக்குச் சென்றிருந்த ஜெய்சங்கர் முன்னாள் ஜனாதிபதி ஜோ பைடனிடம் பிறிக்ஸ் நாணயம் பற்றிய பேச்சில் இந்தியா பங்கெடுக்காது என்று உறுதியளித்திருந்தார். இந்தப் பின்னணியில் அதுவும் அமெரிக்க வரிவிதிப்புக்குப் பின்னரான நிலையில், பிறிக்ஸ் நாடுகளின் தேசிய நாணயங்களை வர்த்தகச் செயற்பாட்டில் பயன்படுத்தலாம் என்ற யோசனை எவ்வளவு தூரம் சாத்தியமாகும் என்ற கேள்விகள் இல்லாமலில்லை.


ஆசிய நாடுகளுடன் ஒப்பிடும்போது இந்தியாவுக்குக் குறைந்த வரி விதிக்கப்பட்டிருப்பதாகச் சுட்டிக்காட்டியுள்ள சர்வதேச வர்த்தகம் பற்றி ஆய்வு செய்யும் அமைப்பான குளோபல் ரேட்றிசேச் இனிவேற்றீவ் (Global Trade Research Initiative) தரமான தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி சகல துறைகளிலும் உற்பத்திகளை வேகப்படுத்தினால் இந்தியாவுக்கு அமெரிக்க வரி விதிப்பு ஒரு பிரச்சினையாக இருக்காது என்று அறிவுரை வழங்கியுள்ளது. சீனா 32 வீதம், தாய்வான் 32வீதம், ஐரோப்பிய ஒன்றியம் 20 வீதம், இந்தியா 26 வீதம், ஜப்பான் 24 வீதம், வியட்நாம் 46 வீதம், தாய்லாந்து 26 வீதம் பிரிட்டன் 10 வீதம், இலங்கை 44 வீதம் என்ற அடிப்படையில் இந்த வரி அமெரிக்காவால் விதிக்கப்பட்டுள்ளது. பெருமளவு வர்த்தகச் செயற்பாடுகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் இந்தியா உள்ளூர் உற்பதிகளை மேம்படுத்தவேண்டிய அவசியத்தை அமெரிக்க வரி தூண்டியிருப்பதாகவும் அந்த நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது. ஆனாலும் இதற்காக இந்தியா மிகக் கடுமையாக தன்னை அர்ப்பணிக்க வேண்டும் என்றும், முக்கியமான துறைகளி லும் சொந்த உற்பத்தி என்பது மிகச் சுலபமானது அல்ல என்றும் இந்த நிறுவனம் எச்சரித்திருக்கிறது. ஓட்டோ மொபைல் பாகங்கள் மற்றும் பொம்மை உற்பத்தி துறைகளில் சீனா, தாய்லாந்து ஆகிய நாடுகள்தான் முன்னிலை வகிக்கின்றன. ஆனாலும் இந்த உற்பதிகளுக்குக் குறித்த நாடுகள் மீது அமெரிக்கா அதிக வரி விதித்திருக்கிறது. இதனைச் சாதகமாக்கி இந்தியா அதிக அளவுக்கு ஏற்றுமதிசெய்தால் வரியின் பாதிப்பிலிருந்து இந்தியா தப்பிக்கொள்ள முடியும் என்று மற்றொரு இந்தியப் பொருளியல் ஆய்வாளர் சுட்டிக்காட்டியிருக்கிறார். இலங்கை போன்ற சிறிய நாடுகளுடன் வர்த்தக உறவுகளை மேம்படுத்த வேண்டிய அவசியங்கள் குறித்தும் இந்த நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது. மிகவும் சிறிய நாடான இலங்கை 44 வீதவரியை எதிர் கொண்டிருக்கிறது. ஆடை உற்பத்தியே இலங்கையின் பிரதான ஏற்றுமதியாகும். முன்னர் 12 வீதம் என்றிருந்த வரியை டொனால்ட் ட்ரம்ப் 44 வீதமாக உயர்த்தியதன் மூலம் இலங்கையின் ஆடை ஏற்றுமதி பாதிப்படையும் என பொருளாதார நிபுணரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஹர்ஷ டி சில்வா சுட்டிக்காட்டி யிருக்கிறார்.

> பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள முடியாமல் தவித்துக் கொண்டிருக்கும் இலங்கை, குறிப்பாக சர்வதேசக் கடன்களை செலுத்த முடியாமல் 2028 ஆம் ஆண்டு வரை கால அவகாசம் கோரியிருக்கும் நிலையில், அமெரிக்கா விதித்துள்ள வரி பெரும் பாதிப்பைச் செலுத்தும் என்பது பகிரங்கமான உண்மை.

இந்திய, பங்களாதேஷ் ஆடைகள் அமெரிக்க ஏற்றுமதியில் கூடுதல் பங்காற்றியிருந்தன. இலங்கையின் தைத்த ஆடைகளைவிடவும் இந்த நாடுகளின் தைத்த ஆடைகள் அமெரிக்க மக்கள் மத்தியில் செல்வாக்குச் செலுத்தியிருந்த நிலையில் இந்த வரி அதிகரிப்பு இலங்கையை இன்னும் பாதிக்கும் என்று அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார். இந்தப் பின்னணியில் இலங்கை வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத் இந்திய முதலீட்டாளர்களைச் சந்திக்கவுள்ளதாகவும் தைத்த ஆடைகளுக்கு வேறு சர்வதேசச் சந்தைகளை இலங்கை பெற முடியாத சூழல் இருப்பதாகவும், எனவே இதற்கான இந்தியாவின் ஒத்துழைப்பைக் கோரவுள்ளதாகவும் கொழும்பு உயர்மட்டத் தகவல்கள் கூறுகின்றன.

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீளமுடியாமல் தவித்துக் கொண்டிருக்கும் இலங்கை, குறிப்பாக சர்வதேசக் கடன்களை செலுத்த முடியாமல் 2028 ஆம் ஆண்டுவரை கால அவகாசம் கோரியிருக்கும் நிலையில், அமெரிக்கா விதித்துள்ள வரி பெரும் பாதிப்பைச் செலுத்தும் என்பது பகிரங்கமான உண்மை.

அதேநேரம் இலங்கை மீதான வரியைக் குறைப்பதனால் இலங்கையின் சில முக்கியமான தளங்களை அமெரிக்காவுக்குக் கொடுக்கவேண்டிய ஆபத்துகள் நேரலாம் என்ற அச்சமும் உண்டு. ஆயினும் இந்தியாவைக் கடுமையாக விமர்சித்த ஜே.வி.பி., குறிப்பாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, அமெரிக்க வரிக்குப் பின்னரான சூழலில் இந்தியாவா? சீனாவா? என்ற திரிசங்கு நிலைக்குள் தள்ளப்பட்டிருக்கிறார் . அதாவது வர்த்தகச் செயற்பாடுகளில் சீனாவுடன் முழுமையாகச் செல்வாதா அல்லது இந்தியாவை நம்புவதா என்ற பெரும் குழப்பத்துக்குள் அவர் இருப்பதாகத் தகவல்கள் கசிந்துள்ளன. 'எண்பது வருட இனப்பிரச்சினைக்குரிய நிரந்த அரசியல் தீர்வை முன்வைத்து வடக்கு, கிழக்கு உள்ளிட்ட இலங்கைத்தீவின் பொருளாதாரத்தை முன்னேற்றக்கூடிய வாய்ப்புகள் உள்ளன.



ஆனால் இலங்கையை 'ஒற்றையாட்சி அரசு' என்ற கட்டமைப்பை மாற்றி பன்முகத் தன்மை கொண்ட அரசாக மாற்றாமல் அது சாத்தியமாகாது ' என சிங்கள ஆய்வாளர் அசோன லியனகே 2022 ஆம் ஆண்டு பொருளாதார நெருக்கடி ஏற்பட்டபோது எழுதிய ஆங்கிலக் கட்டுரையில் சுட்டிக்காட்டியிருந்தார். இதனை அனைத்துச் சிங்கள அரசியல் தலைவர்களும் இனியாவது உணரத் தலைப்படவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
06 ஏப்ரல் 2025



# சிறுவர்களுக்கான சிறந்ததோர் 'பரிசு'

முருகேசு ரவீந்திரன்

"சிந்திக்கத் தெரிந்த மனிதர்கள் எல்லாம் மாணிக்க கோயிலடா" என்ற ஆன்றோர் கூற்றினை இன்றைய சிறுவர்களிடத்தே தூண்டும் ஒரு முயற்சியே கலாபூஷணம் யோசப்பாலாவின் "பரிசு" எனும் சிறுகதைத் தொகுப்பு. உண்மையில் இது சிறுவர்களுக்கும் நல்லதோர் பரிசுதான்.

நாவல்கள், தொடர்கதைகள், சிறுகதைகள் என்று பல இலக்கியப் படைப்புகள் வெளிவரும் இன்றைய சூழலில் சிறுவர்கள் சிந்தித்து புதிய வடிவங்களில் எழுதத்தூண்டும்வகையில் வந்துள்ளது. இந்த சிறுகதைத் தொகுப்பு. கதைகூறலுக்கும் சிறுவர்களின் சிந்தனைக்கும் ஒரு தூண்டலாக அமைந்துள்ளதுடன், பெற்றோரும், ஆசான்களும் கூட இதனைப் படித்து அதனைத் தம் பிள்ளைகளுக்குப் புகட்டும் நோக்கையும் கொண்டதாகவும் இந்நூல் அமைந்திருக்கிறது.

" தமிழில் நல்ல சிறுவர்களுக்கான தேவை பெரிதும் உணரப்படுகின்ற, கதை கேட்கும், வாசிக்கும் பண்பாட்டினைத் தொலைத்துநிற்கும் இன்றைய சூழ்நிலையில் யோசப்பாலாவின் 'பரிசு' எனும் சிறுவர் சிந்தனையைத் தூண்டும் கதைகள் எனும் நூலின் வரவு மகிழ்ச்சி தருகிறது. எழுத்தாளர், உளவளத்துணையாளர், சமூகப் பணியாளர் என்ற பன்முக வளர்ச்சியில் பாலாவின் இந்த புது மலர்ச்சி அர்த்தம் மிக்கது என்பேன்" என்ற பேராசான் கலாநிதி என். சண்முகலிங்கன் கூற்று இந்த நூலின் பெறுமதியை உணர்த்தி நிற்கின்றது.

'மதம், இயற்கை போன்ற வாழ்க்கைக்குத் தேவையானவற்றை அனுபவக்கல்வி மூலம் கற்பிக்கத்தூண்டும் இந்நூல் ஆசிரிய சமூகத்துக்கும் வழிகாட்டும் அரிய நூலாக உள்ளது. குழந்தைகளுக்கு கதைகள் சொல்லும்போது நாங்களும் குழந்தைகளாகி விடுகிறோம். குழந்தைகளை , அவர்களது குழந்தைத்தன்மையை இந்தக் கதைகள் நேசிக்கின்றன. பெரியவர்களின் மனங்களில் இருந்து குழந்தைகளை அவதானிக்கும் திறன் ஆற்றல் கொண்டவரின் அனுபவங்களைக் கொண்டதாக வெளிவந்துள்ள யோசப் பாலாவின் 'பரிசு' எமது சமூகத்திற்குக் கிடைத்த 'பரிசு' என மனநல மருத்துவர் சிவதாஸ் கூறுவதும் கவனத்திற் கொள்ளத்தக்கது. இதுபோன்ற படைப்புகளே வாசிப்புலகை நோக்கி இளையோரை ஈர்ப்பதுடன், எதிர்காலத்தில் அவர்களைஉலகின் ஆளுமையாளர்களாகவும்புடம்போடவைக்கின்றன என்பதே உண்மை.




# போரின் கவிதை



## மதுமிதா 6

மீண்டும் வரக்கூடாத இரவு!
கருகிப்போன மனச்சூட்டின் நெருப்பில்
எரிந்துவிடுமோ இந்த மாசுகொண்ட நிலவு...
எல்லா மனங்களையும் பின்னிப்பிணைக்கும்
வானவெளியிலே தோரணம் கட்டி ஆடும்- நிலா
வலிநிறைந்த இதயங்களை.....பிரித்ததா?
எதுவும் அறியா சிறுகுழந்தை அநாதையானதை
அப்படியே பார்த்திருக்கும்...உயிரில்லா நிலா
இரவின் நிலவு...இரக்கமில்லா இயற்கை
இறைவன் படைத்த கொடுமை இரவு...
இரவென்றால் நடுங்கும்....
வெந்து மனம் நோகும்.....நொடிக்கெல்லாம் வேர்க்கும்....
நிறைய அழுதாயிற்று........
நீர் வற்றிப்போன குளத்தின் வெடிப்பில்...வடியும் உதிரம்.......!
உயிரின் வடிவில் தெரியும் அவர்கள் உருவம்.
இந்த இரவு......பொல்லாத இரவு அரக்கனாக வந்தது..
கைக்குழந்தையாக...என் பாட்டியிடம்
நான் கைமாறிப்போன இரவு...
அம்மாவும் அப்பாவும் எங்கோ அழைக்கப்பட்டார்களாம்..
விசாரணைக்கு என்றார்கள்.
காலம் முழுவதும் கத்திக்கொண்டே
செத்துவிட்ட பாட்டி...
யாருமில்லாத பெண் இவள்
பூப்பெய்தி வாழும்...புதுப்பெண்.
யாருக்குத் தெரியும் என்வாழ்வின் தொடக்கம்...
யாரைக் கேட்பது என் தாயைப்பற்றி...
எவர் புரிந்தார் என் தந்தைபற்றி...
இரவின் வரவே கொடியதென்றால் அதன்
முடிவில் வருகின்ற 'நாளை' பெருங்கொடிது...
கொண்டுபோனவர் கொன்று போனாரோ
சென்றவர் எங்கு சேர்ந்து போனாரோ...
போரின் வலிகளுக்குள்...சனித்த கரு
சாபத்தின் பிடியில் அகப்பட்டதேன்?.....
கோபத்தின் கொடூரம் வலியதாகிப்போனதால்...
கொண்டு போனார்..கொலைக்களம் நோக்கி...
சாபத்தின் பிறப்புகளாக வலியையே சுமக்கும்...
வரலாறு தெரியாத வாழ்வின் தொடக்கங்கள் நாம்...
மீளமுடியாத அழிந்திடும் நினைவில்
வடுக்களும், வலிகளும் மாறுமோ மாறா...
இத்தேசத்தில் வரைபடங்கள் மாறிப்போனாலும்...
இறைவன் நினைத்திருந்தால்- இந்த
இரவுகளை இனிமைகளாக இயற்றியிருக்கலாம்...
இயற்கையை ஆளும் இறைவன்
வாழும் வாழ்வை மாற்றிவிட்டான்..
அரோகராக்களும் ஆரவாரங்களும் ..அவனுக்கு,
அவன் அருள் போற்றும் மனிதர்களிடம்
கேட்கின்றேன் ...வாழ்வைமாற்றி.
எண்ணங்கள் சிதைத்த பல்லாயிரம் உயிர்களை
பலியெடுத்த இறைவனுக்கேன் இத்தனை அரோகராக்கள்
பிஞ்சுக்குழந்தையாக நெஞ்சில் நின்று
விளையாடிய கருவை விட்டுப்போன வலி
தாங்குமா அந்த இதயங்கள்?
இடுகாட்டின் நெருப்பில்...சாகாப்பிணங்களாக
வாழுகின்ற சந்ததிகளாக ...நாம் வாழ்க்கைப்பட்டோம்.
விடியுமொன்றும்....இரவு முடியுமென்றும்
வருவார்களென்று காத்திருந்து
முடிந்தன காலங்கள்....
பெண் இங்கு தனியாக ...
பொய்யான நிழல்களோடு பேசிப்பழகும் வாழ்வு
பழகிவிட்டது....வாழ்வும் தன்னை
பழக்கப்படுத்தியது....
இதுவே வழக்கமாகியது.
வருவார்கள் என்கிறது வானம்......
விடியும் என்கிறது நிலவு.....



- ஆனந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கன்னத்தில் முத்தமொன்று..!

பலாஜினி, பளை



அம்மம்மாவின் உக்களையில் உட்காா்ந்திருந்தாள் தூரி. அவா்களை சுற்றிச்சுற்றி வந்துகொண்டிருந்தாள் தூரியின் பெரியம்மாவின் மகள் கனி. பத்து மாதங்களே நிறைந்திருந்த தூரிக்கு அம்மம்மாவின் உக்களையில் ஏறி அமா்ந்தவாறே அவா்களை சுற்றிச்சுற்றி வரும் சகோதரியைப் பாா்ப்பதில் ஓா் ஆனந்தம்.

அம்மம்மாவின் வீட்டைச் சூழவும் நிறைந்த மரங்கள். அதிலே கொண்டைக் குருவிகளும் மரங்கொத்திகளும் ஆடி அசைகின்ற இலைகளும் தூரிக்குப் பிடித்தமான பொழுதுபோக்குகள். மர இலைகள் காற்றில் ஆடுவதைப் பாா்க்கையில் அவள் குட்டி உதடுகளில் இருந்து மழலைக் கதைகள் ஏராளமாக வரும். அப்படி வருகின்ற கதைகளைக் கேட்டு அவள் பெரியம்மாவின் மகள் கனிக்கு ஒரே உற்சாகம். "அம்மம்மா , தங்கா ஏதோ சொல்லுறாள் அம்மம்மா, தங்கா சிரிக்கிறாள், இப்ப என்னைப் பாத்துச் சிரிக்கிறாள்".தன் உதடுகளைக் கோணி அவள் சொல்லும் விதத்தில் அம்மம்மாவுக்குச் சிரிப்பு வந்துவிடும்.

தூரி மெல்லச் சிணுங்கத் தொடங்கினாள். அவளுக்குப் பசி எடுத்திருந்தது. அம்மம்மா பிசைந்து ஊட்டிவிடப் போகும் பிஸ்கற்றும் பாலும் அவள் பசியைத் தீா்ப்பதற்குத் தயாராகிக்கொண்டிருந்தன.அவள் சிந்தாமல் விருப்புடன் சாப்பிடுவதற்கு கனி கைகளைத் தட்டி ஆடிக் காட்டி கவனத்தை ஈா்த்துக் கொண்டிருந்தாள்.பிஸ்கற்றும் பாலும் சுவைத்துண்ட தூரிக்கு அவள் மேனியெங்கும் சிந்திவைத்திருந்த உணவுத்துகள்களினை அம்மம்மா சுத்தம் செய்து கொண்டிருந்தாா். சாப்பிட்ட களைப்பில் அவளுக்கு நித்திரை வந்துவிட்டிருந்தது. நித்திரைக் குழப்பத்தில் அழத்தொடங்கிய தூரியை அம்மம்மா ஓராட்டத் தொடங்கியிருந்தாள்.

இப்போது கனிக்குப் பசி எடுத்தது. அவள் அம்மம்மாவின் நாடியைச் செல்லமாகத் தடவிக்கொண்டே "அம்மம்மா பசிக்குது" என்றாள். உறங்கிவிட்டிருந்த தூரியைக் கட்டியிருந்த ஏணைக்குள் பத்திரமாக கிடத்தி விட்டு அம்மம்மா கனிக்கு உணவூட்டத் தொடங்கினாா்.

பசி நீங்கிய கனி தூங்கிக்கொண்டிருக்கும் தங்கையை தொந்தரவு செய்யாது தாத்தாவுடன் விளையாடப்போனாள். அவளுக்குத் தெரிந்த வகையில் வட்டங்களையும் பூக்களையும் அவள் தன் தாத்தாவிற்கு வரைந்து காட்டினாள். தனக்குத் தெரிந்தவகையில் மனிதா்களையும் வரைந்தாள்.அம்மம்மாவோ போ்த்திகள் இருவரையும் குளிக்க வைப்பதற்கான ஏற்பாடுகளில் மூழ்கினாா்.

கரப்புக்குள் முட்டை போட்டிருந்த கோழியொன்று சத்தமாக கொக்கரித்து தூரியை எழுப்பியிருந்தது. அவள் ஏணைக்குள் இருந்தவாறே கைகளையும் கால்களையும் ஆட்டி அழத்தொடங்கியிருந்தாள்.அவள் கால்களில் கிடந்த வெள்ளிக்கொலுசுகள் அவள் கால்களின் அசைவுகளுக்கு ஏற்ப ஒலி எழுப்பிக்கொண்டிருந்தன. தாத்தாவும் கனியும் அவளை அழவிடாது சமாதானம் செய்துகொண்டிருந்தாா்கள். நேரம் மதியத்தினைத் தாண்டியிருந்தது.


சஞ்சீவி சிறுகதை

கனியும் தூரியும் குளித்துமுடித்து பசியாறிய களைப்பில் முற்றத்தில் வேடிக்கை பாா்த்துக் கொண்டிருந்தாா்கள். கனி தன் சிறிய சகோதரி தூரிக்கு விளையாட்டுக் காட்டிக் கொண்டிருந்தாள்.அவளைச் சுற்றிச் சுற்றி வந்து ஆடினாள். அவள் ஆடுவதைப் பாா்த்த தூரியும் அம்மம்மாவின் மடியில் இருந்தவாறே தன் கைகளையும் கால்களையும் உற்சாகத்தில் அசைத்தவாறே தன் பாஷையில் ஏதோ சொல்லிக்கொண்டிருந்தாள். சில சமயங்களில் அம்மம்மாவின் காதுகளில் தொங்கிக்கொண்டிருந்த தோடுகளை நோண்டியவாறோ அல்லது அவரின் கலைந்த தலைமுடியினைப் பிடித்து இழுத்தவாறோ அவற்றை ஆராய்ந்து கொண்டிருந்தாள்.அம்மம்மா வலிப்பது போல் நடிப்பது அவளுக்கு பிடித்திருந்தது.

தாத்தா ஆடுகளை மேய்ச்சலுக்காக ஓட்டிச் செல்லத் தயாரானாா். கனி அவா் பின்னால் ஓடிச்சென்று தனக்கு தோதான ஒரு குட்டி ஆட்டினை பிடித்துக்கொண்டாள். அம்மம்மா தூரியைத் தூக்கி உக்களையில் வைத்தவாறே அவா்களின் பின்னால் நடக்கத் தொடங்கியிருந்தாா்.உக்களையில் உல்லாசமாக உட்காா்ந்திருந்த தூரிக்கு புல் மேயும் ஆடுகளும்,அவற்றைக் கட்டியணைத்துக் கொஞ்சுகின்ற அவள் சகோதரியும் மரங்களில் பற்றிக் கிடக்கின்ற மாங்கொடிகளும்,பக்கத்துக் குளத்து நீா் குளிருடன் கலந்து வீசுகின்ற மெல்லிய தென்றலும் முற்றிலும் இயற்கையானதோா் உலகத்தினை சிருஷ்டித்துக் கொண்டிருந்தன. அவள் செவியின் ஓரத்தில் எப்போதும் கிடைக்கின்ற அவளின் அம்மம்மாவின் செல்ல முத்தமும் அவள் குட்டிப் பாதங்களை வருடிவிடுகின்ற கனியின் கொஞ்சல்களும் அவளை இந்தப்பூலோகத்தின் ராணியாக்கி கொண்டிருந்தன.அவள் மழலைச்சிரிப்பு அப்பிரதேசமெங்கும் சிந்திச்சிதறி ஒளிவீசிக் கொண்டிருந்தது.

பொழுது மங்கிக் கொண்டிருந்தது. மேய்ச்சல் முடிந்து வீடு செல்கின்ற ஆடுகளும்,மணிகட்டிய மாடுகளும் தூரியின் மழலைப் பேச்சுக்கு வேறு மறுப்பின்றி தலையாட்டிக்கொண்டே சென்றன. கூடுகளுக்குள் அடைபடுகின்ற கோழிகளுக்கு, கனி ஓட்டம் காட்டிக் கொண்டிருந்தாள். தன் சகோதரி அங்குமிங்கும் ஓடுவதையே கண்கொட்டாமல் பாா்த்துக்கொண்டிருந்தாள் தூரி.இப்போது தூரியின் அம்மாவும் அப்பாவும் அவளை அழைத்துச்செல்வதற்காக வந்திருந்தாா்கள். தங்கைக்கு கையசைத்து விடைகொடுத்தாள் கனி.

இரவிலே அம்மாவின் மடியிலே உறங்கிக் கொண்டிருந்த தூரிக்குக் கனவு வந்தது. கனவிலே அவள் அக்கா கனி வந்தாள். அவளுடன் செல்லம் கொஞ்சி விளையாடினாள்."என்ர குஞ்சு மாம்பழம்" என்று அம்மம்மா அவள் பிஞ்சுக் கைகளில் முத்தமிட்டாா். தாத்தா கைகளை ஆட்டி சிரிக்கவைத்தாா். பெரியம்மா மழலை மொழியில் மதலை கேட்டாா். பச்சை படா்ந்த புல்நிலங்களெங்கும் ஆட்டு மந்தைகள் மேய்ந்து திரிந்தன.அவள் தன் பிஞ்சு உதடுகளைத் திறந்து தூக்கத்திலே சிரித்தாள். சத்தமாக கைகளை ஆட்டிச் சிரித்தாள்.இன்பமாகச் சிரித்தாள்.கைப்பேசியில்லாமல், கணினி இல்லாமல், கலப்படமில்லாமல் நிகழ்கின்ற இந்த அன்புப் பரிமாற்றங்களுக்கு நிகராக உலகில் வேறெதுவுமே இல்லை என்பது யாருக்குமே புரியப்போவதில்லை.



## தலைவர்கள் எழவேண்டும்..!

தமிழர் தொன்மையினை
தரணியிலே முழங்க
ஞானத்தலைவர்கள்
நாளை எழவேண்டும்..!

வெதும்பிய மனங்களிலே
நம்பிக்கை ஒளிவீசி
தியாக வழிநடத்த
தீயாக எழவேண்டும்...!

உழைத்துக் களைத்தவர்கள்
தழைக்க வழிகாட்ட
ஏழைகளின் ஒளி விளக்காய்
ஏற்றவர் எழவேண்டும்...

பிஞ்சுகளின் மனங்களிலே
விழுமியங்களை விதைத்து
ஆய கலைகள் பரப்ப
அருந்தலைவர் எழவேண்டும்!

இரா.ஜெயக்குமார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோடுடைய செவியன்களுக்கு....



வணக்கம்,

உங்களை நினைக்கேக்கை பாவமாக் கிடக்கு.

கிட்டடியில பலாலி றோட்டாலை போற 764 இலக்க பஸ்ஸிலை புன்னாலைக் கட்டுவன் போறதுக்கு ஏறினன். யாழ்ப் பாண கம்பஸுக்குப் போற ஆக்களும் அவையின்ர தொகைக்குச் சமனா உங் களை மாதிரி 'தோடுடைய செவியன்க ளும்' பஸ்ஸுக்க இருந்தனீங்கள். உங் களை நீங்களே இப்ப 'புள்ளிங்கோ' எண்டும் கூப்பிட்டுப் பெருமைப்படுறிய ளாம். ஒருகாலத்தில எங்கட மண்ணைக் காத்த புலியள் எண்டு பெருமைப்பட்ட காலம் போய், இப்ப புள்ளிங்கோ எண்டு பெருமைப்படுற அளவுக்கு எங்கட இனம் எவ்வளவு தரம் தாழ்ந்துபோட்டுதெண்டு நினைக்க கடும் கவலைதான்.




படிக்கப்போறவைக்கு படிக்கிற நோக்கம் இருக்கிற மாதிரி உங்களுக்கு ஒரு நோக்கமும் இல்லை எண்டு பாக்கத் தெரிஞ்சுது. கதைக்கப் பேசத் தெரியாத வீடுகளிலை இருந்துவாற வித்தியாசம், போட்டிருக்கிற உடுப்பு, நடை உடை பாவனை, அரைவாசிப் பேரின்ர வாயிலை வெத்திலை பாக்கு, சிகரெட்டுப் பாவிக்கிறதுக்கு அடையாளமா சொண்டு கறுப்பு, வலிஞ்சு கிழிச்ச காற்சட்டை, போட்டிருந்த காற்சட்டையிலை முழங்கால் பக்கம் வீட்டுக்கு யன்னல் வைச் சதைப்போலை ஓட்டை, வெள்ளடியன் கோழிச் சேவலின்ரை கொண்டை போலை தலைவெட்டு, கையிலை பச்சை குத்திக்கொண்டு, கையிலை நாய்ச் சங்கிலியைப் போலை வெள்ளிச் சங்கிலி, வெள்ளிக் காப்பு, அதோடை பக்திமான்கள் மாதிரி சிவப்புக் கறுப்பு நூல்களைக் கையிலை கட்டிக்கொண்டு .... 'எங்கை போறியள் குஞ்சுகள்?' எண்டு கேட்டால் .... சிலர் பேசாமல் இருக்கிறியள்.... சிலர் முறைச்சுப் பாக்கிறியள்... சிலர் சிரிச்சுச் சமாளிக்கிறியள்.. ஆனால் நாயளைப் போல நிக்க நேரமில்லாமல் ஓட்டம்.

உங்களைப் பாத்த உடனை என்ரை மேன் ஜேர்மனியிலை இருந்து அங்கை உள்ள பார்க்கிலை எடுத்த படங்கள் தான் ஞாபகம் வந்திது. அவனிட்டை. 'அதிலை நிக்கிற வெள்ளைப் பெடியன்கள் ஆரடா? 'எண்டு கேட்டன். அவன் சொன்னான் அவையளை இஞ்சை குருவியள் எண்டு சொல்லு றது. .படிப்பில்லை அரசாங்கம் காசு குடுக்கும். அவைக்கு வேலை தண்ணி அடிக்கிறதும் தூள் அடிக்கிறதும், ஊரைச் சுத்திறதும் தான். முடிஞ்சால் அரசாங்க உடமையளையும் சேதப்படுத்துவி னம். அவங்கள் சில வேளையளிலை பொலிஸுக்கும் அடிப்பாங்கள்'எண்டு சொன்னார். அவங் களை மாதிரித்தான் நீங்களும் ( தோடுடைய செவியன்களும்) இருக்கிறியள்.

பொதுவா நீங்கள் யாழ்ப்பாணக் கம்பஸ்பக்கம் வாறது வேட்டைக்குத்தான் எண்டு சொல்லினம். சினிமாப் படங்களைப் பாத்து உங்கடை மனசுக்குள்ளை நீங்கள் போட்டிருக்கிற கதாநாயக பிம்பம் தான் உங்களை இப்பிடி அலைக்கழிக்கிது எண்டு நினைக்கிறன்.

ஒரு சமூகம் நல்லா இருக்கவேணும் எண்டால் அதிலை பங்குதாரரா இருக்கிற எல்லாரும் ஆரோக் கியமாக இருக்கவேணும். வலு சந்தோஷமாக இருக்கவேணும். நல்ல பிள்ளை குட்டியளைப் பெற வேணும். அவையளை நல்லாப் படிப்பிக்கவேணும். அவையளை நல்ல குடும்பகாரரா ஆக்க வேணும். சமூகத்திலை தற்கொலையள் கூடிப்போச்சுது. தாய் தேப்பன்ரை சொல்லுக்குக் கட்டுப்ப டாமல் வெளிக்கிட்டுத் திரியிற தன்மை கனக்க வந்திட்டுது. கிட்டடியில ஆரோ ஒரு பெடி கடலுக்குள்ளை குளிக்கப்போய் செத்துப்போச்சுது. சவத்திலையும் தண்ணி மணமாம். தாய்தேப்பன் அழுது குளறிச் சினமாம் எண்டு ஒரு செய்தி பேப்பரிலையும் கிடந்திது.

வெளிநாட்டில இருக்கிறவைதான் எங்கட பெடியள், புள்ளிங்கோவா மாறி இப்பிடித் தோடுடைய செவியன்களாக, காடுமேடெல்லாம் மாடுகள் மாதிரித் திரியிறதுக்கு முழுக்காரணம். அவையள் அனுப்பிற காசை வைச்சுத்தான் உந்தத் தலைமயிர் வெட்டும், பச்சைகுத்தும், கிழிஞ்ச உடுப்புகளும், முறுக்கிறதுக்கு மோட்டர்சைக்கிளும் எண்டு எங்கட பெடியள் மாறுறாங்கள். அவையள் இப்பிடி காசு அனுப்பிக் காட்டாட்டில் என்னெண்டு உந்தத் தோடுடைய செவியன்கள் சுதியா இருக்கேலும்?

தேசியத்தைப் புடுங்கிற வேலையைப் பிறகு பாப்பம். இந்தத் தோடுடைய செவியன்களைத் திரும்ப வும் மனுசராக்க என்னத்தைச் செய்யப்போறம்? இதுகும் ஒரு சமூகப்பொறுப்பு எண்ட உணர்வு எங்களுக்கு மட்டுமில்லை வெளிநாட்டில இருக்கிறவைக்கும் உறைக்கவேணும்.

இப்படிக்கு
துன்பந் தாங்காத
[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உளர்ப்திணம்

பாகம் 3

○ இராகவன்

எனக்குத் தேவா மாஸ்ரரைக் குப்பிழான் ஐ. சண்முகன் மூலமாத்தான் தெரி யும். சண்முகனுக்கு அவர் ஒரு நல்ல நேர்மையான குடும்ப நண்பர். நான் சண்முக னைச் சந்திக்க அவரின்ர வீட்டுக்கு அநேகமாக ஒவ் வொருநாளும் பின்னேரம் போறனான். அப்பிடிப் போகேக்குள்ளதான் ஒருநாள் சண்முகன் எனக்குத் தேவா மாஸ்ரரை அறிமுகப்படுத்திவைச்சார். ஆள் நல்ல சிவலை. நடுத்தரமான உயரம். அவரை முன் பின் தெரியாதாக்கள் முதன்முதலாக அவரைப் பாக் கேக்குள்ள அவரை ரீச்சர் எண்டு நினைக்கமாட்டினம். ஒரு டொக்ரர் எண்டுதான் நினைப்பினம். அப்பிடி யொரு 'லுக்கில' இருப்பார். நல்ல சென்ஸோட முசுப் பாத்தியாக் கதைப்பார். சண்முகனில ஒரு நல்ல பழக் கமிருக்கு. அதென்னெண்டால் என்னை ஆருக்கும் அறிமுகப்படுத்தேக்குள்ள கொஞ்சம் பாத்துப்பாராமல் புளுகித்தான் அறிமுகப்படுத்துவார். தேவாமாஸ்ரறுக் கும் அப்பிடித்தான் சண்முகன் என்னை அறிமுகப்ப டுத்திவைச்சார். அப்ப தேவாமாஸ்ரர் என்னை ஒரு பிரமிப்போட பாத்திட்டு "எனக்கு நெடுநாளாக் கதை எழுதவேணும் எண்டொரு ஆசையிருக்கு ஆனால் நேரங்கிடைக்குதில்லை !" எண்டு சொன்னது எனக்கு இப்பவும் ஞாபகமிருக்குது.

சண்முகனின் துணைவியார் புனிதவதி ரீச்சரும் தேவா மாஸ்ரரின் துணைவியார் கமலவதனா ரீச்சரும் உடுப் பிட்டி மகளிர் கல்லூரியில் ஒன்றாகப் படிப்பித்ததில் நல்ல சிநேகிதம். அப்பிடியொரு சிநேகிதம் ஆருக்கும் கிடைக்காது எண்டு புனிதவதி ரீச்சர் என்னோட கதைக் கேக்குள்ள சொல்லியிருக்கிறா. பூவோட கூடிய நாரும் மணம்பெறும் எண்டதைப் போல சண்முகன் ஒரு தேர்ந்த எழுத்தாளர் எண்டதால புனிதவதி ரீச்சரையும் எழுதிறதுக் குத் தூண்டிக்கொண்டேயிருப்பார். உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில என்ன நாடகம் போடுற தெண்டாலும் எல்லாரும் புனிதவதி ரீச்சரைத் தான் பிடிப்பினம். அவவின்ர பாடம் தமிழ். அவவுக்கும் நாடகத்துக்கும் ஒரு தொடர்பும் இல்லை. ஆனால் பட்டறிவைக்கொண்டு நாடகங்களை எழுதிற தில அவவுக்கு ஒரு தாடனமிருந்தது. அதால அவவால நாடகங்களை எழுதிச் சிறப்பாக மேடையேற்றக்கூடிய தாக இருந்தது. அவ எழுதிய நாடகங்கள், பாடசாலை மட்டம், கோட்டமட்டம், வலயமட்டம், மாகாண மட்டத்தி லயெல்லாம் பரிசுகளைப் பெற்றிருக்கு. அந்த நாடகங் களையெல்லாம் தொகுத்து முதலில் "நாட்டியம் நாட கம்" எண்ட தலைப்பில் 2009 ஏப்ரலில் ஒரு புத்தக மாக புனிதவதி ரீச்சர் வெளியிட்டா. அந்த வெளியீட்டு விழாவும் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியிலதான் நடந் தது. அந்த விழாவில குந்தவை, பா.ரகுவரன் ஆக்க ளோட நானும் ஒரு முக்கியமான பேச்சாளன்.

23

அப்ப இறுதிக்கட்ட ஈழப்போர் முனைப்புடன் நிகழ்ந்து கொண்டிருந்த பரபரப்பும் நெருக்கடியும் மிகுந்த கால கட்டம். நான் என்ர உரையை ஆரம்பிக்கிறதுக்கு முதல், "நாள்தோறும் வன்னியில் செத்துமடிந்து கொண்டிருக்கும் அப்பாவிப் பொதுமக்களின் ஆத்ம சாந்திக்காக எழுந்துநின்று இரண்டு நிமிட அகவணக் கம் செலுத்துவோம்" எண்டு சொல்லி எல்லோரையும் அகவணக்கம் செலுத்தவைச்சதும் இப்ப ஞாபகத்துக்கு வருகுது. இதைவிடப் புனிதவதி ரீச்சரின்ர செல்வாக்கில நானும் சண்முகனும் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில ஒரு சிறுகதைப் பயிற்சிப்பட்டறைக்கு வளவாளராகப் போயிருக்கிறம். மற்றது அங்க நடந்த வாணி விழாக்க ளில மேடையேறின நாடகங்களுக்கும் நடுவராப் போயிருக்கிறன். அதெல்லாம் ஒரு பொற்காலம்.

(தொடரும்)

# ஊடகவியலாளர்களை குறிவைத்து வேட்டை



## யசிகரன், வளர்மதி விடுதலை

(சென்றவாரத் தொடர்ச்சி)



நீதிக்கான நெடும்பயணம் 46

### உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைமீறல் மனு தாக்கல்

அந்தப் பொருள்கள் அரசுடமையாக்கப்படப் போவதைப் பற்றி எந்த அறிவித்தலும் யசிகரனுக்குக் கிடைக்காத காரணத்தினால், இதற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் அடிப்படை மனித உரிமைமீறல் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. உயர்நீதிமன்றத்தினால் விசாரணை நடத்துவதற்கு அனுமதியளிக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்த வழக்கு விசாரணைக்கு திகதி குறிப்பிடப்பட்டது.

மேல்நீதிமன்றத்தினால் குற்றமற்றவர் என விடுதலை செய்யப்பட்ட ஒருவரின் உடமைகள் அரசு உடமையாக்கப்பட்ட சம்பவம் இதுவாகத்தானிருக்கும். இதில் பரிதாபத்துக்குரிய விடயம் யாதெனில் யசிகரனினால் திருகோணமலை வீதி, மட்டக்களப்பில் நடத்தப்பட்டு வந்த தமிழிச்சி அச்சகத்தின் முழுப் பொருள்களையும் 2003 அன்று விடுதலைப்புலிகள் எடுத்துச்சென்றிருந்தனர். 2009ஆம் ஆண்டு ஜெம்பட்டா வீதியில் யசிகரனால் நடத்தப்பட்ட Ekwality Graphics காரியாலயத்தில் இருந்த முழுப்பொருள்களும் யசிகரன் வழக்கில் விடுதலை யான பின்னர் அரசுடமையாக்கப்பட்டுவிட்டன. மேளத்திற்கு இரண்டு பக்கமும் அடிதான்.

### திசநாயகத்தின் 20 வருடகால சிறையும் யசிகரனின் விடுதலையும்

மேல் நீதிமன்றத்தால் யசிகரன், வளர்மதி ஆகியோர் விடுதலை செய்யப்பட்டதும் பத்திரிகையாளர் திசநாயகத்துக்கு 20 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதும் பலர் மனதில் சில நியாயமான கேள்விகள் எழும்பியிருந்தன. 'Northern Eastern Monthtly Magazine' பத்திரிகையில் கட்டுரையை எழுதியவருக்கு 20 வருட சிறைத்தண்டனை. ஆனால் அந்தப்பத்திரிகையை வெளியிட்ட யசிகரன் எப்படி விடுதலையானார் என்பதே அந்த மில்லியன் டொலர் (Million Dollar Question) கேள்வியாக இருந்தது .

யசிகரன், வளர்மதிக்கு எதிராக குற்றம் சாட்டப்பட்ட வழக்கில் இவ்விருவரும் விடுதலையானதற்கு பல காரணங்களைக் கூறலாம்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்திலும், அவசரகால விதியின் கீழும் கைதுசெய்யப்படுபவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய முக்கியமான சான்றாக அரசு தரப்பில் முன்வைக்கப்படுவது, எதிரியினால் கொடுக்கப்படும் குற்ற ஒப்புதல் வாக்குமூலமே. ஆயுதங்கள், வெடிபொருள்களுடன் கைதுசெய்யப்பட்டிருந்தாலும், குற்ற ஒப்புதல் வாக்குமூலம் இல்லாமல் ஒரு வீதமான குற்றச்சாட்டுப் பத்திரங்களைக்கூட காணமுடியாது. ஆனால் ஆயுதங்கள், வெடிபொருள்களோடு கைதுசெய்யப்படுபவர்கள் பயங்கர ஆயுதங்களை உடமையில் வைத்திருந்தார்களெனக் குற்றச்சாட்டுப் பத்திரம் தாக்கல் செய்து எதிரிகள் தண்டிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் உள்ளன. ஆனால் வேறு எந்தவித சாட்சியங்களுமில்லாதவிடத்து குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை பிரதான சான்றாகக் கொண்டு அரசு குற்றச்சாட்டுப்பத்திரங்களை தாக்கல் செய்கின்றது. பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் இன உணர்வினைத் தூண்டக்கூடிய முறையில் எழுதுவதும், பிரசுரிப்பதும் குற்றமென பயங்கரவாதத் தடைச்சட்டம் பிரிவு 2(H) கூறுகின்றது. அதற்கு தண்டனை 5 வருடத்திலிருந்து 20 வருடம் எனச் சட்டத்தில் கூறப்பட்டுள்ளது. அப்படியானால் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் இல்லாமலேயே இவர்களுக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்து இவர்கள் இருவரையும் தண்டித்திருக்கலாமே, ஏன் திசநாயகத்தை மட்டும் குற்றவாளி என்று கூறி, யசிகரன் விடுதலை செய்யப்பட்டார்?

இந்தக் கேள்வி பலர் மனதில் எழுந்திருக்கும் .இதற்கான விடை யாதெனில், திசநாயகத்தினால் தமிழில் கொடுக்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலம் சுயமாகக் கொடுக்கப்பட்டதாக நீதிபதி கட்டளை வழங்கிவிட்ட நிலையில், பொதுவாக குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தில் அடங்கியுள்ள விடயங்களின் அடிப்படையிலேயே குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு மேல்நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்படுகின்றன.

அரசியற்கைதியினால் சுயவிருப்பத்தின்பேரில் கொடுக்கப்பட்டதாகக் கூறப்படும் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் சுயமானதென நீதிமன்றத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னர் அது அரச தரப்பின் முக்கியமான சாட்சியாக மாறிவிடுகின்றது. அதனையடுத்து பிரதான வழக்கு தொடர்ந்து நடத்தப்படும்; அந்த விசாரணையில் வெளிவரும் சாட்சியங்களின் நம்பகத்தன்மையின் அடிப்படையில் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரியாலேயே கொடுக்கப்பட்ட விவரங்களை உறுதிப்படுத்த நீதிமன்றத்தில் மற்றைய அரச சாட்சியங்கள் ஒப்புறுதிப்படுத்தும் சான்றாக (Corroborative Evidence & Supprting Evidence) துணைபுரிகின்றன. இந்நிலையில் குற்றச்சாட்டுக்கள் ஒப்புவிக்கப்பட்டு எதிரி குற்றவாளியாகக் காணப்பட்டு தண்டனைக்கு உட்படுகின்றார்கள்.

குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தினை, அதனைக் கொடுத்தவர்களுக்கு எதிரான சான்றாக நீதிமன்றம் ஏற்றுக்கொண்டாலும் அதனை மட்டும் வைத்து எதிரியைத் தண்டித்துவிடமுடியாது என்பதற்கு சில வழக்குகளின் தீர்ப்புகள் நல்ல எடுத்துக்காட்டாக உள்ளன. இருந்தபோதிலும் பொதுவாக குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை சுயமானதும் நம்பகத்தன்மையுள்ளதும் என நீதிமன்றம் திருப்திப்பட்டால் பின்னர் வழக்கில் எதிரி விடுதலையாவது என்பது மிகவும் விதிவிலக்கான சந்தர்ப்பங்களிலேயே ஏற்படுகின்றது.

திசநாயகம் தனது குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தில் கொடுத்திருந்த விடயங்கள் சுயமாகக் கொடுக்கப்பட்டவை என்ற அடிப்படையிலும் மேலும் திசநாயகத்தினால் வரையப்பட்ட கட்டுரை இனங்களுக்கு இடையே குரோதத்தை ஏற்படுத்தக்கூடியதெனவும் அரசினால் அழைக்கப்பட்ட மற்றைய அரச சாட்சிகள் கொடுத்த சான்றுகளின் அடிப்படையிலும் அவர் குற்றவாளியாகக் காணப்பட்டார். அவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு சட்டத்தின் பிரகாரம் குறைந்தது 5 வருட தண்டனையிலிருந்து ஆகக்கூடிய தண்டனையாக 20 வருடம் வரை தண்டனை வழங்கும் அதிகாரம் நீதிமன்றத்துக்கு உள்ளது. இருந்தபோதிலும் நான்கு குற்றச்சாட்டுகளுக்கும் ஆகக்குறைந்த தண்டனையாக தலா 5 வருடப்படி மொத்தமாக 20 வருட தண்டனையே திசநாயகத்துக்கு விதிக்கப்பட்டது.

(தொடரும்)

---

ந.பரமேஸ்வரன்

# அடங்காத்தமிழன் சுந்தரலிங்கம்:

## தெரியவேண்டிய சில குறிப்புகள்

22



1972 ஆம் ஆண்டு இலங்கை குடியரசாகப் பிரகடனப்படுத்தப்பட்டபோது, குடியரசு அரசியல் யாப்பு உருவாக்கப்பட்டபோது 1972 ஆம் ஆண்டு இலங்கைக் குடியரசு அரசியல்யாப்பில் பௌத்தமதத்திற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டதுடன் சோல்பரி அரசியல் யாப்பில் இருந்த சிறுபான்மையினரைப் பாதுகாக்கும் 29 ஆவது ஷரத்து நீக்கப்பட்டது.

1972 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இலங்கைக் குடியரசு அரசியல்யாப்பை இடதுசாரிகளும் இணைந்தே உருவாக்கினர். 1956 ஆம் ஆண்டு தனிச்சிங்களச்சட்டம் கொண்டுவரப்பட்டபோது ஒரு மொழி இரு நாடுகள், இரு மொழி ஒரு நாடு என (தனிச்சிங்களச்சட்டம் பிரிவினைக்கு வழிவகுக்கும் என உரையாற்றிய கொல்வின் ஆர் டீ சில்வாவே) 1972 ஆம் ஆண்டு இலங்கை குடியரசு அரசியல் யாப்பை வரைந்தார். 1972 ஆம் ஆண்டு இலங்கைக் குடியரசு அரசியல்யாப்பை எதிர்த்துச் செல்வநாயகம் தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத்துறந்தார். செல்வநாயகம் 1972 ஆம் ஆண்டு இலங்கைக் குடியரசு அரசியல் யாப்பை எதிர்த்து சுவரொட்டி ஒட்டினார். சுந்தரலிங்கம் 1972 ஆம் ஆண்டு இலங்கைக் குடியரசு அரசியல் யாப்பிற்கு எதிராக பிரிவி கவுன்சில் என அழைக்கப்படும் பிரிட்டிஷ் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இலங்கைப் பிரதமர், சட்டமா அதிபர், நீதியமைச்சர் ஆகியோருக்கு எதிராக 1972 ஆம் ஆண்டு குடியரசு அரசியல்யாப்பு சட்டவிரோதமானது என வழக்குத் தொடுத்தார். 1972ஆம் ஆண்டு இலங்கை குடியரசாக பிரகடனப்படுத்தப்படும் வரை இலங்கை நீதித்துறையின் தீர்ப்பில் திருப்திப்படாதவர்கள் பிரிவி கவுன்சிலில் மேன்முறையீடு செய்யலாம் என்ற நடைமுறை அமுலில் இருந்தது.

வழக்கைப் பரிசீலித்த நீதிபதிகள், குடியரசு அரசியல்யாப்பு இன்னும் அமுலுக்கு வரவில்லை. அது அமுல்படுத்தப்பட்ட பின்னர் வழக்கைத் தாக்கல்செய்யுங்கள் எனக் கூறினர். 1972 ஆம் ஆண்டு இலங்கைக் குடியரசு அரசியல்யாப்பின் ஊடாக பிரிவி கவுன்சிலின் அதிகாரத்தை இலங்கை அரசாங்கம் இரத்துச் செய்துவிட்டது. இரண்டாவது தடவை சுந்தரலிங்கம் மனுவைத் தாக்கல்செய்த போது இப்போது இலங்கை குடியரசாகிவிட்டது. இனி நாங்கள் இறைமையுள்ள ஒரு நாட்டு நிர்வாகத்தில் தலையிடமுடியாது என சுந்தரலிங்கத்தின் மனுவை நிராகரித்து விட்டனர். செல்வநாயகம் சுவரொட்டி ஒட்டியதை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு என தம்பட்டமடிப்போர் சுந்தரலிங்கம் பிரிவி கவுன்சிலில் வழக்குத் தாக்கல் செய்ததை வேண்டுமென்றே மறைத்துவருகின்றனர் என்றே சொல்லவேண்டும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உழைப்பே அதிர்ஷ்டம் தரும்



ஒரு விவசாயிக்கு வயது அதிகமானதால் இறக்கும் தருவாயில் இருந்தார். தம் பிள்ளைகள் பொறுப்பில்லாமல் இருப்பதைப் பற்றி கவலையாக இருந்தார். ஒரு நாள், அவர் தம் பிள்ளைகளை அருகில் அழைத்தார். தன்னுடைய நிலங்களை அவர்களுக்குப் பிரித்துக் கொடுத்தார். அது மட்டுமல்லாமல், அந்த நிலங்களில் ஓரிடத்தில், ஓரடி ஆழத்தில் புதையல் இருப்பதாகச் சொன்னார். அதைத் தேடி எடுத்துக்கொள்ளும்படிச் சொல்லிவிட்டு இறந்துபோனார்.

பிள்ளைகள் மூவரும் தந்தைக்குச் செய்ய வேண்டிய இறுதிக்காரியங்கள் அனைத்தையும் செய்தார்கள். அதன்பின், அவர் குறிப்பிட்டிருந்த புதையலை எடுப்பதற்காக நிலத்தைத் தோண்ட ஆரம்பித்தார்கள்.

முதலில் மூத்த மகனின் நிலம் முழுவதையும் ஒரு அடி ஆழத்துக்கு தோண்டினார்கள். புதையல் எதுவும் கிடைக்கவில்லை. ஒருவேளை, அப்பா "இரண்டடி" என்று சொல்வதற்குப் பதிலாக "ஓரடி" என்று சொல்லிவிட்டாரோ என்ற சந்தேகத்தில் பிள்ளைகள் மூவரும் சேர்ந்து, மூத்தவனின் நிலத்தை இன்னும் ஓரடி ஆழமாகத் தோண்டினார்கள். அப்போதும் அவர்களுக்குப் புதையல் கிடைக்கவில்லை.

எப்படியும் புதையலைக் கண்டுபிடித்துவிடவேண்டும் என்ற வெறியில், இரண்டாவது மகனின் நிலத்தையும் இரண்டடி வரை தோண்டினார்கள். ஏமாற்றம்தான் மிஞ்சியது.

'இவ்வளவு தூரம் வந்தபின் எப்படி விடமுடியும்' என்று கடைசி மகனின் நிலத்தையும் இரண்டடி தோண்டினார்கள். மறுபடியும் ஏமாற்றமே!

அப்பா மேல் வருத்தம் வந்தாலும், அவர்கள் 'சரி.. தோண்டியது வீணாகவேண்டாம்' என்று எண்ணி, அந்த நிலங்களில் விதை விதைத்தார்கள். நீர் பாய்ச்சினார்கள். உரம் போட்டார்கள். உழைப்பு வீண்போகுமா? ஆண்டு முடிவில் அவர்கள் நிலத்தில் அமோக விளைச்சல். அறுவடை செய்து விற்றதில் அவர்களுக்குக் கொள்ளை இலாபம். இப்படி உழைப்பால் வரும் பயனைத் தான் அப்பா புதையல் என்று குறிப்பிட்டார் என்று பிள்ளைகள் மூவரும் புரிந்து கொண்டார்கள்.



# வெற்றி

உன்னை ஜெயிக்க யாரும்
பிறக்கவில்லை என்று
எண்ணிக்கொள்ளாதே
எல்லோரையும் ஜெயிக்க
நீ பிறந்து இருக்கிறாய் - என்று
நினைத்துக்கொள்
வெற்றி உன் பக்கம்
நீ ஜெயித்துக் கொண்டே இரு
நீ வளரும் வரை அல்ல
உன்னை வெறுத்தவர்கள்
உன்னை வாழ்த்தும் வரை

அ.நிதுசா
தரம்- 8
யா/ உரும்பிராய் இந்துக் கல்லூரி







சி.சிவதீபிகா
தரம் 9
கொக்குவில் இந்துக் கல்லூரி

ர.கர்ணிகா
தரம்1F
யா/புனித ஜோண் பொஸ்கோ



ஜெ.ஜெய் ஆகாஷ்
தரம் 6
யா/பத்திரிசியார் கல்லூரி





ஜெ.அஞ்சிதன்
தரம் 04
யாழ்ப்பாணக் கல்லூரி



ச.சந்தோஷி
தரம்- 8D
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி



மாணவர்களே!

நீங்களும் உங்கள் கைவண்ணங்கள், ஆக்கங்களை அனுப்பலாம்.

அனுப்ப வேண்டிய முகவரி!

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org